தமிழீழ மகளிர் தின விசேட இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம்- 7 | அக்டோபர் 2021 | திருவள்ளுவர் ஆண்டு 2052







## போர் வீரர்கள் வீரச்சாவடையும் இடத்தில் நடுகல் வைப்பதும் அதைப் போற்றிப் பாதுகாப்பதும் தமிழர் பாரம்பரியம்..






அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின் தொகையறிந்த தூய்மை யவர்

# எழுநிலம்

செப்டெம்பர் 2021

தொடர்புகளுக்கு:

ezhunilam@yahoo.com

## திருக்குறள்



குறள் 711:

அவையறிந் தாராய்ந்து சொல்லுக சொல்லின்
தொகையறிந்த தூய்மை யவர்

விளக்கம்:

சொற்களின் தொகுதி அறிந்த தூய்மை உடையவர், அவைக்களத்தின் தன்மை அறிந்து ஏற்ற சொற்களை ஆராய்ந்து சொல்ல வேண்டும்.

# பயிற்சியா? தளம்

அக்டோபர் மாதம். ஈழத் தமிழர்களினாலும், விடுதலைப் புலிகளினாலும் மறக்க முடியாத மாதம். இந்த மாதத்தில்தான் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகளை முதன்முதலில் சண்டைக் களத்தில் வழிநடத்திய முந்தைய மன்னார் மாவட்டத் தளபதி லெப் கேணல் விக்டர் களத்தில் வீரச்சாவடைந்திருந்தார். 1987 அக்டோபர் 5இல் இந்திய அரசின் சதிவலையில் சிக்கி, சித்திரவதைக்குள்ளாகி, நஞ்சருந்தி உயிர்த் தியாகம் செய்த பன்னிரு வேங்கைகளின் மாதம் இது. எமது தேசியத் தலைவரோடு தோளோடு தோள் நின்று பல சண்டைக் களங்கள் கண்ட லெப் கேணல் புலேந்திரன் ( புலேந்தி அம்மான் ) உட்பட 12 வேங்கைகள் தமது உயிர்களைத் துச்சமாக மதித்து இந்திய துரோகத்தை உலகறியச் செய்திருந்தனர். ஏற்கனவே திலீபனுக்கு இழைக்கப்பட்ட அநீதியால் தவித்திருந்த மக்கள் அடுத்து நடந்த இந்த அக்கிரமத்தால் கொதித்துப் போயிருந்தனர்.

திட்டமிட்ட வகையில், புலிகளிடமிருந்து ஆயுதங்களைக் களைந்த ஒரு வல்லரசான இந்தியாவுக்கு எதிராகவே ஆயுதம் தாங்கிய போராட்டத்தில் விடுதலைப் புலிகள் தீவிரமாக இறங்கவும், சண்டையின் முதல் நாளில் விடுதலைப் புலிகளின் முதலாவது வித்தாக 2ம் லெப் மாலதி ( சகாயசீலி பேதுருப் பிள்ளை ) வீழவும் ஒரு பெரும் தீப்பொறியாக அமைந்தது இந்தத் துரோகம். இந்திய இராணுவத்தை அடித்து விரட்ட வேண்டும் என்று தலைவர் முடிவெடுத்ததற்கு மிக முக்கிய காரணம் ஒன்று இருந்தது. அதுதான் தாய்நாட்டின் இறைமை. அந்நிய சக்திகளை தாயகத்தினுள் ஊடுருவ விடவே கூடாது என்பதில் உறுதியாய் இருந்தார் தலைவர். போத்துக்கேய, ஒல்லாந்த, ஆங்கிலேய படையெடுப்புகள் தமிழர் வாழ்வைச் சின்னாபின்னப்படுத்தியதும், இன்றளவும் நாம் சித்திரவதை அனுபவிக்க அந்நிய சக்திகளின் ஆக்கிரமிப்பு மிக முக்கிய காரணம் என்பதையும் நாம் மறந்துவிட முடியாது.

புல்மோட்டையிலிருந்து, இல்மனைற் கனிய வளத்தை அள்ளிச் செல்ல வந்த சீனக் கப்பல்

# அமைக்கும் முயற்சியா?

## ஆசிரியர் பக்கம்

09.09.1997 அன்று புலிகளின் தாக்குதலுக்குள்ளானது அந்நியர்களின் ஆதிக்கத்தை விடுதலைப்புலிகள் அனுமதிக்க மாட்டார்கள் என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு. எமது இறைமையை மட்டுமல்லாது சிறிலங்காவினுள்ளும் அந்நியப் படைகள் புக முடியாது அரணாக நின்று காத்தது எமது விடுதலைப் போராட்டம்தான்.

போராட்டம் மௌனிக்கப்பட்டதன் பின்னர்தான் எமது தாய்நிலமும் சிங்களப் பிரதேசங்களும் படிப்படியாக அந்நிய ஆக்கிரமிப்பிற்குள் வந்துகொண்டு இருக்கின்றன. 2011, 2015ம் ஆண்டுகளில் சீன இராணுவத்துடன் இணைந்து சிறிலங்கா இராணுவத்தினர் இலங்கையில் செய்த இராணுவ ஒத்திகையும், அதன் பின் சீனா தன் அகலக்கால்களை சிறிலங்காவிலும் எமது மண்ணிலும் பதித்திருப்பதும் தெரிந்ததே. இப்போது, இந்த வருடத்தின் ஜூன் மாதத்தில் 24.06.21 இலிருந்து 30.06.21 வரை CARAT-21 என்ற பெயரில் யப்பானிய, அமெரிக்க, இலங்கை கூட்டு கடற்படைப் பயிற்சி கொழும்புத் துறைமுகத்தில் அரங்கேறியுள்ளது.

இப்போது, 04.10.21 இலிருந்து 12 நாட்களுக்கு, எமது தாய்நிலப் பிரதேசங்களான அம்பாறையிலும் தொப்பிக்கல் காட்டுப்பிரதேசத்திலும் இந்திய இராணுவத்துடன் இணைந்த கூட்டுப் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது சிறிலங்கா இராணுவம். எமது தாய்நிலத்திலும் சிறிலங்காவிலும் தமக்கான கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த தளங்களை அமைப்பதற்காக அந்நிய சக்திகள் துடிக்கின்றன. நாட்டுப் பற்றாளராக தம்மை இனங்காட்டிக் கொள்ளும் இராஜபக்ச குடும்பம் பணத்துக்கும் பதவிக்குமாக நாட்டைக் கூறுபோட்டுக் கொண்டு இருக்கிறார்கள். திருகோணமலையில் யார் ஆதிக்கம் செலுத்துவது என்பதிலும் போட்டி என்பதை இந்திய இராணுவம் திருமலையில் என்ற அண்மைய செய்தியும், அமெரிக்கா திருமலையில் இரகசிய தளம் அமைப்பு என்று சில நாட்களுக்கு முன் சிங்கள அமைப்பு ஒன்று தகவல் கசிய விட்டதும் வெளிப்படையாக எடுத்துக் காட்டுகின்றன.

ஆக, தமிழர்களையும் தமிழர் தாயகத்தையும் தமது தேவைகளுக்காக மட்டுமே உபயோகப்படுத்தி, அவர்களை ஒரு பகடைக்காய்களாகவே பயன்படுத்தி வந்துள்ளது வெளியுலகு. இந்த நிலை இனியும் மாறப் போவதில்லை. தமிழ் நிலத்தில் சிங்களக் குடியேற்றங்களை தொடர்ந்து விஸ்தரித்து, உள்ளிருந்தே குழி பறிக்கிறது சிங்களம். எமது வாக்குகள் மூலம் பாராளுமன்றம் சென்ற எங்கள் பிரதிநிதிகளால் காலத்துக்குக் காலம் குரலை உயர்த்திப் பேசவும் வெளிநடப்புச் செய்யவும் மட்டுமே முடிந்திருக்கிறது. எமது வாழ்க்கையை நாம்தான் நிர்ணயம் செய்ய வேண்டும். என்று நாம் ஒன்றுபட்டு எழுகின்றோமோ அதுதான் எமது பாதுகாப்பிற்கான முதற்படியாக அமைய முடியும்.

**பெண் விடுதலையே ஒரு இனத்தின் விடுதலைக்கான முதல் படி.**

**– தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்**



# தீர்வா? ஏமாற்றமா..?

## மீண்டும் பகடைக் காய்கள் ஆக்கப்பட்டார்களா தமிழர்கள்?

ஐ.நாவில் மனித உரிமைகளுக்கான கூட்டத்தொடர் நடைபெறப் போகிறது என்றாலே எம் மக்கள் பலத்த எதிர்பார்ப்புடன் ஒன்றாகத் திரண்டு விடுவார்கள். இந்த வருடமும் அப்படித்தான். எமக்கு ஒரு தீர்வு கிடைத்துவிடும் என்ற எதிர்பார்ப்புடன் இருக்கிறார்கள் எம் மக்கள். ஜெனிவாவில் நடைபெறும் ஐ நாவின் மனித உரிமைகள் பேரவையின் 46வது கூட்டத் தொடரில், இலங்கையில் நடைபெற்ற இனப்படுகொலைக்கும், போர்க்காலப்பகுதியில் காணாமற் போனவர்களுக்குமான பொறுப்புக் கூறலை உறுதிப்படுத்தும் விதமாக பிரிட்டனின் தலைமையில் தீர்மானத்தின் வரைபு கொண்டுவரப்பட்டது. இந்த வரைபிற்கு ஆதரவாக 22 நாடுகளும், எதிராக சீனா, ரஷ்யா, பிலிப்பைன்ஸ், பாக்கிஸ்தான், பங்களாதேஷ், கியூபா உள்ளிட்ட 11 நாடுகளும், நடுநிலையாக 14 நாடுகளும் வாக்களித்திருக்கின்றன.




பாரி




ஏற்கனவே, இனப்படுகொலை நடைபெற்றதற்கான காணொளிகள், புகைப்படங்கள், இராணுவத்திடம் சரணடைந்ததை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் போன்ற தகவல் திரட்டுகள் ஐ.நா வசம் இருக்கின்றன. இருந்தும், அவற்றை உபயோகிக்க முடியாது, இலங்கையின் குற்றச் செயலை உறுதிப்படுத்தும் விதமாக தகவல் திரட்டப்பட வேண்டும் என்று அதற்காக பெருந்தொகை நிதியையும் ஒதுக்கியுள்ளது ஐ.நா. இந்த ஆவணங்களைத் தேடித் திரட்டுவதில் மும்முரமாய் இருக்கிறார்கள் எம்மவர்கள்.

இப்போதைய கூட்டத் தொடரில், ஐ நாவின் மனித உரிமைகள் ஆணையாளர் 'மிச்சேல் பக்லெற்' தன்னுடைய அறிக்கையை வாசித்தார். இதில் இரண்டு முக்கியமான விடயங்களை அவர் குறிப்பிட்டிருந்தார். இலங்கையின் நீதி நிர்வாகம் மற்றும் ஜனநாயக உண்மைத் தன்மை பற்றிக் குறிப்பிட்ட அவர் அவ்விரண்டும் கேள்விக் குறியாகவுள்ளது என்ற

கண்டனத்தைத் தெரிவித்திருந்தார். இந்த அறிக்கையில் தமிழர்கள் என்ற பதமோ, சிறுபான்மையினர் என்ற சொற்றொடரோ இல்லை. இனப்படுகொலை என்ற கடும் பிரயோகமோ இடம் பெறவில்லை. இது தமிழர்களுக்கு ஏமாற்றம்தான். ஒரு சிலர் 'தமிழர்கள்' என்று ஐ நா குறிப்பிட வேண்டும் என எதிர்பார்ப்பதே கேலிக் கூத்தானது என விமர்சிக்கின்றனர். அப்போ இனப்படுகொலை?

சரி, அறிக்கை அப்படி என்னதான் சொல்கிறது?

- உள்நாட்டுப் போர் முடிவுற்று 12 ஆண்டுகளாகியும் அங்கு பல இடங்களில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுகின்றன என்ற பகிரங்க குற்றச்சாட்டு.
- கடந்த காலங்களில் நிலவிவந்த அடக்குமுறை, துன்புறுத்தல்கள் தொடர்கின்றன. பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைப்பது உறுதிப்படுத்தப்படவில்லை என்ற கண்டனம்.
- 2015 இல், இனி மனித உரிமை மீறல்கள் நடைபெறாது என வாக்குறுதி அளித்த இலங்கை அரசு அதனைக் காப்பாற்றவில்லை.
- சிவில், நிர்வாகப் பணிகளிலான இராணுவத் தலையீடு ஜனநாயக ஆளுமை மீதான ஆக்கிரமிப்பாக உள்ளது.
- இவை போன்ற காரணங்களால், புதிய வகையிலான, பொறுப்புணர்வை உள்ளடக்கிய தீர்வை ஆராயவும், எதிர்காலத்தில் மனித உரிமை மீறல்கள் நடைபெறா வண்ணம் உறுதிப்படுத்தி, பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்கவழி செய்யவும் வேண்டும் என்ற பரிந்துரை.

இதில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதி பற்றி பேசப்படவில்லை. ஒன்றிணைந்த இலங்கைக்குள் இனி எதுவும் இவ்வாறு நடைபெறாது பார்த்துக் கொள்ளவேண்டும் என்றொரு அழுத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது இலங்கைக்கு அச்சுறுத்தல் அல்ல. இருந்தும், மிச்சேல் பக்லெற்றின் குற்றச்சாட்டுகளை முற்றாக நிராகரிப்பதாக இலங்கை அறிவித்திருக்கிறது. இவ்வறிக்கை ஆதாரமற்றது என்றும், இலங்கையின் சுயமரியாதையைப் பாதிக்கும் வகையில் இது இருப்பதாகவும் இலங்கை வெளி விவகார அமைச்சர் தினேஷ் குணவர்தன கூறியுள்ளார்.

மீளவும், தமிழர்களுக்கு எதிரான வன்முறைகள் நிகழாமல் பார்த்துக் கொள்வதாக அங்கு உறுதியளித்த கோத்தபாய, உள்ளகப் பொறிமுறையுடன் பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்படும் எனவும் தெரிவித்திருக்கிறார். வெளியார் தலையீடு தேவையில்லை என்பதை மீண்டும் அங்கு சூசகமாக வலியுறுத்தியிருக்கிறார். அதன் பின்னர் நியூயார்க்கில் ஐ நா செயலாளரைச் சந்தித்தபின், காணாமல் போனோரிற்கான மரணச் சான்றிதழ்களும் நட்டஈடும் வழங்கப்படும் என்று துணிச்சலாகப் பேட்டியளித்தார் கோத்தபாய.



காணாமற் போனோருக்கான மரணச் சான்றிதழ் கொடுப்பதும் மீளவும் எந்த வன்முறையும் நடக்காது என்பதும் நாங்கள் கொலை செய்தோம் என்பதை பகிரங்கமாக ஒத்துக் கொள்கிறார் என்றுதானே அர்த்தமாகிறது? 2010 இல் இலங்கை சென்ற போர்க் குற்றங்களுக்கான ஐ நாவின் அப்போதைய ஆணையர், அந்த நேரம் தான் மகிந்தவைச் சந்தித்தபோது 'நான் அவர்களைக் கொன்றேன்' என்று தன்னிடமே சொன்னதாக இப்போதுதான் வெளிவிட்டிருக்கிறார். இப்போது, கோத்தபாயவின் இந்த பகிரங்க அறிவிப்பு எந்த நாடுகளையும் அதிர்ச்சியடையச் செய்யவில்லை. மாறாக, பெரும்பாலான நாடுகள் அதை அங்கீகரித்து வரவேற்றிருக்கின்றன.

மனித உரிமை மீறல்கள் எதுவும் நடைபெறாது என்று கோத்தா வாக்குறுதியளித்த அதே வேளை, திரை மறைவில் வழமைபோல தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை முடுக்கிவிட்டுள்ளது சிங்கள அரசு. சிறைச்சாலை மற்றும் புனர்வாழ்வு அமைச்சுக்கு பொறுப்பாகவிருந்த லொகான் ரத்வத்த அநுராதபுரம் மற்றும் வெலிக்கட சிறைச்சாலைகளில் தமிழ் அரசியற் கைதிகளின் தலையில் துப்பாக்கியை வைத்து மிரட்டி அராஜகம் செய்த பிரச்சனையின் பின்னர், அப்பதவியை ராஜினாமா செய்து விட்டார். ஆனால் தொடர்ந்தும் ராஜாங்க அமைச்சர் பதவியில் இருக்கிறார். அவர்மீது அடிப்படை மனித உரிமை மீறல் வழக்கு போடப்பட்டுள்ளது. அதில்

- அவர் ராஜாங்க அமைச்சர் பதவியில் நீடிக்கக் கூடாது.
- அவரைக் கைது செய்து விசாரிக்க வேண்டும்.
- பாராளுமன்ற உறுப்பினர் பாதுகாப்பிற்காகக் கொடுக்கப்பட்ட அந்தக் கைத்துப்பாக்கியைப் பறிமுதல் செய்ய வேண்டும்.
- தமிழ் அரசியற் கைதிகளின் பாதுகாப்பிற்காக வேறு இடத்திற்கு மாற்றப்பட வேண்டும்.

என்பனவும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதுவரை சிங்கள அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இனியும் எடுக்கப் போவதாகவும் தெரியவில்லை. கூட்டத் தொடர் முடியுமுன்னரே இத்தனை துணிவுடன் செயற்படுகிறார்கள் என்றால் பின்னாளில் தமிழர்களின் நிலைக்கு உத்தரவாதம் இருக்குமா?

புலம் பெயர் தமிழர்களுடன் தான் பேசத் தயார் என்ற கோத்தபாயவின் அறிவிப்பை அடுத்து, பிரிட்டனைத் தளமாகக் கொண்டு இயங்கும் 8 அமைப்புகள் சேர்ந்த ஒரு பிரிவும், அமெரிக்காவைத் தளமாகக் கொண்டு இயங்கும் 4 அமைப்புகள் சேர்ந்த ஒரு பிரிவும், இந்தியாவை நம்பி அரசியல் செய்யும் இன்னுமொரு பிரிவும் பேசுவதற்குத் தயாராகி விட்டன.

இவை அனைத்தும், தமிழர்களை பகடைக் காய்களாக வைத்து திரைமறைவு ஒப்பந்தங்கள் நிகழ்ந்திருப்பதையும் இனியும் நிகழவிருப்பதையும் உறுதி செய்கின்றன. உலக ஒழுங்கைத் தீர்மானிக்கும் உலக அரசியற் போக்குத்தான் எந்தவொரு நாட்டினதும் உள்நாட்டு அரசியலைத் தீர்மானிக்கின்றது என்பதை நாம் மறந்துவிட முடியாது. இதன் ஒரு வெளிப்பாடாக நியூயார்க்கில் வைத்து ஜி.எல் பீரிஸ் இந்திய வெளியுறவு அமைச்சர் ஜெய்சங்கரை சந்தித்து பேசியிருக்கிறார்.

'இனப் பிரச்சனைக்கான தீர்வு எட்டப்பட்ட பின், எஞ்சியுள்ள பிரச்சனைகள் தீர்க்கப்பட வேண்டும்' என்று ஜெய்சங்கர் தெரிவித்திருக்கிறார். சில மாதங்களுக்கு முன்னர், 13ம் திருத்தச் சட்டத்தை மீளுருவாக்கி அதை நிறைவேற்ற வேண்டும் என தெளிவாகத் தெரிவித்த இந்தியா இப்போது அந்தர் பல்டியடித்து எஞ்சிய பிரச்சனைகள் என்று இழுப்பதன் நோக்கம் என்ன?

கொழும்புத் துறைமுகத்தின் கிழக்குப் பகுதியை இந்திய வர்த்தகத்திற்காகக் கொடுப்பதாக முந்தைய சிங்கள அரசினால் செய்யப்படவிருந்த ஒப்பந்தம் புதிய அரசிடம் பிசுபிசுத்துப் போயிருந்தது. அம்பாந்தோட்ட துறைமுகம், port city என்று சிறிலங்காவின் இறைமையை சீனாவிடம் அடகுவைத்த இலங்கை அப்போது இந்தியாவிடம் சிங்கள மக்கள் தமது இறைமை பறிபோவதை விரும்பவில்லை என்று சப்பைக்கட்டு கட்டியிருந்தது. அதே அரசு இப்போது கொழும்புத் துறைமுகத்தின் மேற்குப்



பகுதியை இந்தியாவிற்கு தாரை வார்த்திருக்கிறது. இந்தியாவால் அப்பகுதியை அபிவிருத்தி செய்ய முடியும், இந்தியாவிற்கான வர்த்தகத்திற்குரிய பாரிய கப்பல்களை நிறுத்தும் முக்கிய துறைமுகமாக பயன்படுத்த முடியும், சீனாவின் இலங்கை மீதான ஆதிக்கத்தை கட்டுப்படுத்தி இலங்கையை அதனது பிடியில் வைத்துக் கொள்ளவும் முடியும். இதற்கான ஒப்பந்தம் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி அமைதியான முறையில் எட்டப்பட்டிருக்கிறது. அதேபோல, GSP Plus வரி ரத்து என்ற ஐரோப்பிய யூனியன் இப்போது சிறிலங்காவுடன் பேசி அதை மீளாய்வு செய்யும் நோக்கில் தன் பிரதிநிதிகளை சிறிலங்காவுக்கு அனுப்பியுள்ளது.

ஆக, ஒன்றுபட்ட இலங்கையின் இறைமைக்குள், அங்கு நடக்கும் அடிப்படை மனித உரிமை மீறல்களைக் கண்டிக்கும் மிச்சேல் பாக்லெற் அம்மையாரின் அறிக்கை, மரண சான்றிதழ் கொடுப்பதாக ஒத்துக்கொண்ட கோத்தபாயவின் துணிச்சலான பேச்சு, பிரச்சனைகள் எல்லாம் முடிவுக்கு வந்துவிட்டது போன்று எஞ்சிய பிரச்சனைகள் பற்றிய இந்திய வெளியுறவு அமைச்சரின் பேட்டி, இவைகள் தமிழரின் எதிர்பார்ப்பிற்கு சாதகமானதாகவும் தெரியவில்லை, பிரச்சனைக்கு தீர்வு கிடைக்கும் போலவும் தெரியவில்லை.

35 வருடகால விடுதலைப் போராட்டத்தை முடிவிற்குக் கொண்டு வருவதற்காக இந்தியாவும் மேற்குலகமும் சிறிலங்காவுடன் சேர்ந்து செய்த சதிகள் கொஞ்சமல்ல. 'நீ மட்டும் ஆதாயத்தை அனுபவிக்கிறாய், நாங்கள் செய்த உதவிக்கான ஆதாயம் எங்கே?' என்பதுதான் எஞ்சிய பிரச்சனைகள் என்ற பதத்தின் பின்னே தொக்கி நிற்கின்றதா?.. தமிழ்த் தரப்பு மூத்த அரசியல்வாதிகள் அரசியற் சூது அறியாதவர்களல்ல. இந்த அரசியற் சதுரங்கத்தில் அவர்களின் பங்கு என்ன? ஆயிரம் கேள்விகள்.


மொத்தத்தில், கொன்றொழிக்கப்பட்ட, இன்னமும் விடுதலை வேண்டி நிற்கும் தமிழர்கள் பற்றி உலக அரசியல் அக்கறைப்படுவதாகத் தெரியவில்லை. மீண்டும் பகடைக் காய்கள் ஆக்கப்பட்டார்களா தமிழர்கள்?

**தமிழ்த் தரப்பு மூத்த அரசியல்வாதிகள் அரசியற் சூது அறியாதவர்களல்ல. இந்த அரசியற் சதுரங்கத்தில் அவர்களின் பங்கு என்ன?**

# காலமெல்லாம் யாம் போற்றும் சூரியப் புதல்வியரே!

அன்னக்கிளிகளாய்
அந்திப்பொழுதுலவ
அஞ்சிக்கிடந்தவர்கள்,
அன்னைத் தமிழ்காக்க
அக்கினிப் பறவைகளாய்
அணிவகுத்து நின்றனரே!

வண்ணப் பூங்குயில்களாய்க்
கூவித்திரிந்தவர்கள்,
கன்னம் சிவப்பேறக்
கனவுலகில் கிடந்தவர்கள்
விண்ணைச்சுடும் அனல்கொண்டு விழிநெருப்பேந்தி
விடுதலைபாடித் திரிந்தனரே!



அன்னம்போல் நடைபயின்று
அடுக்களையிற் கிடந்தாங்கே,
வண்ணமலர் சூடிக் கூந்தல்
முடிந்த நல் வனிதையர்கள்,
மண்ணின் புதல்வியராய்
மணிமகுடம் கொண்டனரே!

எண்ணமெல்லாம் எழில் கொஞ்சும்
வண்ணக் கனவுகளோடு
மண்ணில் வலம் வந்த
வண்ணக் காரிகையர்கள்
திண்ணமாய்த் திடம்கொண்டு
தீயென ஆயினரே!

அண்ணன் வழிநின்று
அழியாத் தடம்பற்றிச்
சின்னக் கனவுவிட்ட
சித்திரப் பாவையர்கள்,
மண்ணைச் சிறைகொண்ட
மடமைத்தனம் ஒடித்த
மாபெரும் தேவியரே!

மண்ணைப் படைக்கின்ற மாலதிகள்,
விந்தைப்போர் புரிந்த விதுசாக்கள்,
யார்க்கும் அஞ்சா வீர துர்க்காக்கள்,
அக்கினி மடிசுமந்த அங்கயற்கண்ணிகள்,
யாவர்க்கும் துணிவுதரும் யாழினிகள்
காலமெல்லாம் யாம் போற்றும் சூரியப்புதல்வியரே!

**–காந்தள்–**

# போர்க்காலத்தில் ஒரு விடியல்



– கொற்றவை –





ஈழ விடுதலைப் போராட்டமானது தமிழர்களின் வாழ்வில் மாத்திரமன்றி தமிழ்ப் பெண்கள் வாழ்வியலிலும் பெரும் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. நூற்றாண்டு காலமாக, சாதிய முறைமைகளினாலும் எழுதப்படாத கடுமையான சமூகச் சட்டங்களினாலும் முடக்கி வைக்கப்பட்டிருந்த பெண்களின் தனித்துவம், ஆயுதப் போராட்டம் நிகழ்ந்த உன்னதமான காலகட்டத்தில் தான் உணரப்பட்டிருக்கிறது, வெளித் தெரிந்திருக்கிறது.



விடுதலைப் போராட்ட காலத்தில், தரைப்படை, கடற்படை, விமானப் படைகளில் மட்டுமல்லாது விடுதலைக்காக கட்டியெழுப்பப் பட்டிருந்த அத்தனை துறைகளிலும் சமபங்கு வகித்து தமது விடுதலைக்கானதும் நாட்டு விடுதலைக்கானதுமான பங்கைச் செலுத்தியிருந்தனர் பெண்கள். ஈட்டிய வெற்றிகளில் பெண்களுக்கும் சம பங்கிருந்தது. இதில் ஆச்சரியம் என்ன இருக்கிறது? தாய் நாட்டின்மீதும் தம் மக்கள் மீதும் அடங்காப் பற்றுக் கொண்ட தலைவன் எங்களுக்குக் கிடைத்தான். அந்த ஒப்பற்ற வீரனின் பின்னால் தமிழினமே அணி திரண்டது. போர்க்குணமும் ஒழுக்கம் தவறாத பண்பும் கொண்ட தலைவரின் பெண்களை மதிக்கும் ஒப்பற்ற குணம் ஆண்களின் மனதில் ஒரு பாரிய மனமாற்றத்தை ஏற்படுத்தியது வெளிப்படை. பெண்களின் எழுச்சிக்கு இதுவும் ஒரு பெரிய உந்துசக்தியாக அமைந்திருந்தது.

ஆயுதப் போராட்டத்தில் தம்மை இணைத்துக் கொண்ட பெண்களைத் தாண்டி, சமூகத்திலிருந்த பெண்கள் தாமாகவே பொது வெளிக்கு வந்து, தமது பங்களிப்பைச் செய்யக் கூடிய நிலையி






ருந்தது அன்று. சட்டம், ஒழுங்கு போன்ற வேலைகளிலும், தமிழீழக் காவற்துறையிலும் கல்வி கலாசார வேலைகளிலும் விருப்புடன் இணைந்து பணியாற்றிய பெருந்தொகைப் பெண்கள் இதற்கொரு எடுத்துக்காட்டு.

ஏராளமான பெண் எழுத்தாளர்கள் உருவாகியிருந்தனர். நியாயத்தைத் தட்டிக் கேட்கும் துணிச்சலுடன் இருந்தனர். பெண்கள் மீதான குற்றங்கள் இல்லையெனும் அளவிற்கு கணிசமாகக் குறைந்திருந்தன. பாரதி கண்ட புதுமைப் பெண்ணை பாரதத்தில் இன்னும் தேடிப் பார்க்கவேண்டிய நிலையில், ஈழத்துப் பெண்கள் துணிச்சலுடன் நள்ளிரவிலும் நடமாட முடிந்தது. திரும்பிப் பாருங்கள். சாதியத்தின் பிடியிலும் சமூகக் கட்டுப்பாடு என்ற பெயரிலும் ஆண்களை விடவும் மிகமோசமாகப் பாதிக்கப்பட்டிருந்த பெண்களுக்கு, இந்தப் பொற்காலத்தில் ஒரு விடியல் கிடைத்தது.

இடைப்பட்ட இந்தக் காலகட்டத்தில், இந்திய ஆக்கிரமிப்பு இராணுவ படையெடுப்பும் வயது வேறுபாடின்றி பெண்கள் போராளிகளாகவும், நாட்டுப்பற்று மிகுந்த வீராங்கணைகளாகவும் உருவெடுக்க இன்னுமொரு காரணியாக அமைந்தது. எங்களுடைய வரலாற்றில் மிக முக்கியமான நாள் அக்டோபர் 10, 1987. அன்றுதான் அமைதிப்படை நரிகளின் சாயம் வெளுத்தது. பெரும் படையெடுப்பில் யாழ் மாவட்டத்தின் பல பகுதி களினூடாக உள்நுழைய முயன்று விடுதலைப் புலிகளின் கடும் எதிர்ப்பைச் சந்தித்தார்கள் அவர்கள். இந்த நாளில்தான் விடுதலைப் புலிகளின் பெண்போராளி மாலதி சண்டையில் காயமடைந்து, சயனைட் உட்கொண்டு வீரச் சாவடைந்தாள். களத்தில் பலியான முதல் விடுதலைப் புலி பெண்போராளி இவள். 2ம் லெப் மாலதியைத் தொடர்ந்து, அன்றைய தினமே வீரவேங்கைகள் கஸ்தூரி, ரஞ்சி, தயா ஆகியோர் களப்பலியாகினர்.

*1995ம் ஆண்டு, சர்வதேச மகளிர் தினமான மார்ச் 8 இல் விடுதலைப் புலிகளின் மகளிர் அணியினர் ஒரு முக்கியமான தீர்மானத்தை எடுத்தனர். மாலதியின் நினைவுதினம் வருங்காலத்தில் தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளாகக் கொண்டாடப்படவேண்டும் என்பதே அது. அன்றிலிருந்து பெண்களின் சிறப்புக்களையும், அவர்களின் பிரச்சனைகளையும் வெளிக்கொணரும் நாளாக அக்டோபர் 10 கொண்டாடப்பட்டு வருகிறது.*

ஆயுதங்கள் மௌனிக்கப்பட்டதன் பின் பெண்களின் நிலை எப்படியிருக்கிறது? இனப்படுகொலையும் காணாமல் ஆக்கப்படுதல்களும் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்க, பெரும்பான்மையாக, பெண் தலைமைத்துவக் குடும்பங்கள் கொண்ட சமூக அமைப்பாக மாறியிருக்கிறது எமது தமிழ்ச்சமூகம். பாதிக்கப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் இன்னமும் வறுமைக் கோட்டிற்குக் கீழேயே வாழ்கிறார்கள். வெளிப்படையாகவும், மறைமுகமாகவும் தமிழ்க் கலாசாரம் சிதைக்கப்படுகிறது. இதன் ஒரு வெளிப்பாடாக, எமது அடுத்தடுத்த தலைமுறையினர் தலைநிமிர்ந்து வாழ முடியாத வண்ணம் கசிப்பு, போதை வஸ்து, பாக்கு, விபசாரம் போன்றன திட்டமிட்டு புகுத்தப்பட்டு இளைய தலைமுறை சீரழிக்கப்படுகின்றது. கட்டுக்கோப்பாக இருந்த எமது சமூகம் இன்று 'வாள்' கலாசாரத்தின் பிடியில் சிக்கித் தவிக்கின்றது. வயது வரம்பின்றி, பெண்கள் மீதான பாலியல் வன்கொடுமைகள் உச்சத்தை எட்டியுள்ளன.

எதிர்மாறாக, புலம் பெயர் தேசங்களில் பெண்கள் எந்த வேலையாக இருந்தாலும் எவரையும் நம்பியிராமல் தாமே செய்யத் துணிந்து விட்டனர், எல்லாத் துறையிலும் மிளிர்கிறார்கள். தாயகம், புலம்பெயர் தேசம் என்ற பிரிவினை இல்லாமல் பெண்கள் ஒன்றாகக் கரம் கோர்த்து வேலைகளில் இறங்கினால் சமூகத்தில் அவர்களைப் பிணைத்திருக்கும் பிரச்சனைகளிலிருந்து விடுபடுவதற்கான வாய்ப்புகள் அதிகம். இந்த தமிழீழப் பெண்கள் எழுச்சி நாளில் இதற்கான அத்திவாரமிடுவோம்.

# போர் வீரர்கள் வீரச்சாவடையும் இடத்தில் நடுகல் வைப்பதும் அதைப் போற்றிப் பாதுகாப்பதும் தமிழர் பாரம்பரியம்..

## ஒரு போராளியின் அனுபவப் பதிவு

செப்டெம்பர் மாத கடைப்பகுதி. 1991ம் ஆண்டு. யாழ் மாவட்டத்தில் திருநெல்வேலியில் இருந்த விடுதலைப்புலிகள் பெண்கள் முகாமில் ஒரு ஒன்றுகூடல். 2ம் லெப் மாலதியின் நினைவு நாள் அக்டோபர் 10 இல் வருகிறது. அந்த எழுச்சி நாளை சிறப்பாகச் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்வது பற்றியும், அதை யார்யார் எப்படிப் பிரித்துச் செய்வது என்பது பற்றியும் தீர்மானிப்பதற்கான ஒன்றுகூடலே அது.

திடீரென்று, அந்த மாவட்ட வேலைகளுக்குப் பொறுப்பாக இருந்தவருக்கு ஒரு யோசனை. மாலதி, கோப்பாய் - நாவற்குழி வீதியில் இருக்கும் வயல் வெளியில் இந்திய இராணுவத்துடனான சண்டையில் முதல் களப்பலியான விடுதலைப்புலிப் பெண்போராளி. அவர் வீழ்ந்த இடத்தை வாங்கி, அந்த இடத்திலேயே அவருக்கு ஒரு நடுகல் நட்டால் என்ன? எல்லோரும் அந்த யோசனையை ஆமோதித்தனர்.

வலிகாமப் பிரதேசப் பொறுப்பாளராக இருந்தவர் உற்சாகமானார். அதற்கான வேலைகளை தானே முன்னின்று செய்வதாக உடனே புறப்பட்டுச் சென்றார். அந்த நிலத்திற்குச் சொந்தக்காரரை தேடிக் கண்டுபிடித்து, அந்த நிலத்தில் மாலதி வீரச்சாவடைந்த அந்த சிறிய நிலப்பரப்பை மட்டும் வாங்கும் நோக்கில் உரிமையாளருடன் கதைத்தார்.

### அன்று பிற்பகல் - முகாமில்...

“ அக்கா! ஒரு பிரச்சனை!” வலிகாமப் பொறுப்பாளரும் அவரும் உடனடியாகப் புறப்பட்டனர். நில உரிமையாளரைச் சந்தித்தனர். நிலத்துக்காரர் திட்டவட்டமாக மறுத்துவிட்டார். நிலத்தைத் தருவதற்கல்ல. காசு பெற முடியாது என்பது அவருடைய திட்டவட்டமான முடிவு. போராட்டத்தில் தனக்கும் பங்கிருப்பதாக உறுதியாகச் சொல்லிவிட்டார். போராளிகளிடம் உண்மையில் பணம் இல்லை. அவர்கள் என்றுமே பணம் வைத்திருப்பது கிடையாது. இயக்கத்தின் நிதிப் பொறுப்பாளரான தமிழேந்தி அப்பாவிடம் காணி வாங்கப் போகிறோம் என்று சொன்னால் நிலைமை என்னவாகும் என்று நினைத்துப் பார்க்கவே பயமாக இருந்தது. ஆனாலும், ஏதோவொரு துணிவில் பேச்சுவார்த்தையில் இறங்கிவிட்டனர். இதுகூட காணிக்காரருக்குத் தெரியும்.

### காணிக்கார ஐயா உறுதியாகவிருந்தார்

“பிள்ளையள்!. காணி உங்கடை!. மழை வரமுதல் கெதியாக் கட்டுறதைக் கட்டி முடியுங்கோ.”

வருவது வரட்டும் என்ற துணிச்சலுடன் நடுகல் நாட்டி சுற்றிவர பூச்செடிகள் வைத்து அழகுபடுத்தியாயிற்று. நடுகல்லை, யோகி அண்ணா திறந்து வைப்பதாகவும், அங்கிருந்து ஊர்வலமாக நடந்து சென்று கோப்பாய் சந்தியின் அடுத்த பக்கத்தில் உரும்பிராய் வீதியில் இருக்கும் கந்தசுவாமி கோவில் முன்றலில் பொதுக்கூட்டம் வைக்கவும் ஒழுங்கு செய்தாயிற்று.

இரண்டு போராளிகளுக்கும் அதிர்ச்சி காத்திருந்தது. தேசியத் தலைவரிடமிருந்து அழைப்பு வந்திருந்தது.



'உடனடியாக என்னைச் சந்திக்கவும்!'

அப்போதுதான் நிலைமையின் தீவிரம் அவர்களுக்கு உறைத்தது. போராளிகள் நிலம் வாங்குவதில்லை. அதுவும் அனுமதிகூடப் பெறாமல், இலவசமாக ஒரு இடத்தைப் பெற்று அதில் நடுகல்லும் கட்டியாகிவிட்டது.

அண்ணா குரலை உயர்த்திப் பேசமாட்டார். அதிர்ந்து கதைக்க மாட்டார். நிதானம் தவறிப் பேசியதேயில்லை. ஆனால், கட்டுப்பாட்டை மீறினால் நிச்சயம் தண்டனையுண்டு.

'அண்ணை இயக்கத்தை விட்டு வீட்டுக்கு அனுப்பத்தான் போறார்.' உலகத்திலுள்ள அத்தனை பயங்களும் அவர்களின் தலைகளுக்குள் குடியேறின. நடந்தவை அனைத்தையும் பொறுமையாகக் கேட்டார் தலைவர். முடிவாக என்ன சொல்லப்போகிறாரோ என்ற பயத்தில் நின்றிருந்தனர் போராளிகள்.

" சரி! நடுகல் வைக்கும் யோசனை எப்படி வந்தது?" ஏச்சு விழப் போகிறது என்று எதிர்பார்த்திருந்த போராளிகளுக்கு இன்ப அதிர்ச்சி.

" நல்ல முயற்சி. அதுவும் முதற் பெண் போராளிக்கு.."

" போர் வீரர்கள் வீரச்சாவடையும் இடத்தில் நடுகல் வைப்பதும் அதைப் போற்றிப் பாதுகாப்பதும் தமிழர் பாரம்பரியம்.."

தமிழர்களின் வரலாற்றில் நடுகற்களின் பங்கு பற்றியும், எங்கெங்கெல்லாம் தமிழ் மன்னர்களின், வீரர்களின் நடுகற்கள் இன்னும் இருக்கின்றன என்பன பற்றியும், அவை கூறும் வரலாறு பற்றியும் அண்ணா விளக்கமாகச் சொன்னார். புத்தகங்கள் வாசித்து






வரலாறு பற்றிய எங்களுடைய அறிவை வளர்த்துக் கொள்ளுமாறு அறிவுரை சொன்னார்.

" தமிழரின் வரலாற்றைச் சொல்லும் புராதன இடங்களை முக்கிய இடங்களாக அறிவித்து அவற்றைப் போற்றிப் பாதுகாக்க வேண்டிய கடமையும் எங்களுக்கு இருக்கு".

தலைவரின் ஆழமான அறிவு போராளிகளுக்கு வியப்பைத் தந்தது. 'இவருக்கு எப்போது நேரம் கிடைக்கிறது புத்தகங்கள் படிக்க?' என்றோ படித்ததை அப்படியே நினைவுபடுத்தி புள்ளிவிபரத்துடன் சொல்லும் அவரின் ஞாபகசக்தி வழமைபோலப் பிரமிக்க வைத்தது.

" நல்ல வேலை செய்திருக்கிறீங்கள். இனிமேல் அனுமதி பெற்றுத்தான் வேலையை ஆரம்பிக்க வேணும், தமிழேந்தியிடம் சொல்லி விடுறன். காசு வாங்கி அந்த நல்ல மனிதரிடம் கொடுங்கோ, அவர் வேண்டாம் என்றாலும் நாங்கள் எங்கடை கடமையைச் சரியாச் செய்யவேணும்..."

இதுதான் தலைவர். எதையுமே சரியாகச் செய்ய வேண்டும் என்று சிந்திப்பவர்.. இம்மியும் பிசகாமல் அதன் வழி நடப்பவர். அண்ணாவிடம் பாராட்டுப் பெற்ற சந்தோசத்துடன் போராளிகள் விடைபெற்றனர். அண்ணா சொன்னார் என்ற போதும் நிலத்தின் சொந்தக்காரர் உரிமையுடனும் புன்னகையுடனும் மறுத்துவிட்டார்.

"தம்பிக்குச் சொல்லுங்கோ, போராட்டத்தில எங்களுக்கும் பங்கு இருக்கெண்டு..."

களத்தில் வித்தான முதல் பெண்போராளிக்கு நடுகல் வைப்பதற்கு தன்னுடைய நிலத்தை உவந்தளித்த அந்த நல்ல மனிதருக்கும் இந்த இடத்தில் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# பார்த்தி என்கிற பார்த்தீபன் பின்னாளில் திலீபன்

பார்த்தியை எனக்கு பாடசாலை நாட்களிலிருந்தே தெரியும். சிறந்த சதுரங்க விளையாட்டாளன். நான்கு தடவைகள் மாவட்ட ரீதியான சதுரங்கப் போட்டிகளில் சிறந்த வீரனாக தெரிவு செய்யப்பட்டவன். சதுரங்கப் பயிற்சிப்பட்டறைகளில் சந்தித்தபோது பழக்கம். அவருடைய ஊரவர்களில் பலர் என்னுடைய நண்பிகள். இதனால் பெயர் சொல்லிக் கதைக்கும் அளவிற்கு அறிமுகம் இருந்தது. இடையில், பள்ளிப் படிப்பே பெரும்பாடாகிப் போனது. இராணுவக் கெடுபிடிகள், சுற்றி வளைப்புகள், கைதுகள், காணாமல் போதல்கள் படுகொலைகள் என்று எல்லோர் வாழ்விலும் ஆட்டம் காணவைக்கும் நிகழ்வுகள் தொடர்ச்சியாக அரங்கேறிக் கொண்டிருந்தன. காலத்தின் தேவை கருதி நானும் போராட்டத்தில் நம்பிக்கை கொண்டு செயற்பட்டுக் கொண்டிருந்தேன்.



ஆயுதப் பயிற்சி எடுக்க வேண்டும் என்ற வேட்கையுடன் அப்போது எனக்குத் தெரிந்தவர்களாக விருந்த பண்டிதர் அண்ணா, அல்பேட் அண்ணா, கிட்டண்ணா என்று யாரைக் கண்டாலும் அவர்களை நச்சரிப்பது வழக்கம். சமூகத்தில் எத்தனையோ ஆயிரம் வேலைகள் செய்ய வேண்டியுள்ளது, அதைச் செய்யுங்கள், பிறகு பயிற்சி எடுக்கலாம் என்பதுதான் எப்போதுமே பதிலாக வரும். அப்போது திலீபன் என்ற பெயரும் அடிபடும். அப்போது எனக்கு திலீபன் யாரென்று தெரிந்திருக்கவில்லை.

பிரதேச ரீதியாக சமுதாயத்தில் வேலை செய்து கொண்டு இருந்தபோது, எல்லா இடங்களிலும் சிறிய சிறிய மகளிர் குழுக்களாக இணைந்து தான் செயற்பட்டு வந்தோம். யாழ் பல்கலைக் கழக மறுமலர்ச்சிக் கழகத்தில் பெண்களுக்கான ஒரு ஒன்றுகூடல் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. கிட்டண்ணாவுடன் பலர் வந்திருந்தனர். எங்கள் எல்லோரையும் இணைத்து திலீபன் பொறுப்பாக வேலை செய்வார் என்று அறிமுகப்படுத்தப்பட்டார். ஒரே ஆச்சரியம். பார்த்தி திலீபனாகியிருந்தார். அவருக்கும் என்னைப் பார்த்ததும் கொஞ்சம் ஆச்சரியம்தான். இணைந்து வேலைகளில் ஈடுபடும் போதுதான் அவருடைய ஆளுமையை என்னால் முழுமையாகப் பார்க்க முடிந்தது. நாங்கள் வெளியிட்ட 'சுதந்திரப் பறவைகள்' பத்திரிகைக்கு முழுமையான ஆக்கமும் ஊக்கமும் தந்து வழிநடத்தியவர் திலீபன். அது மட்டுமல்லாமல் சுதந்திரப்பறவைகள் அணி விரிவடைவதற்கும் நெருக்கடிகளுக்கு மத்தியில் பலவேறு

# கார்த்திகை



வகையான வேலைத்திட்டங்களை உறுதியுடன் நாங்கள் முன்னெடுப்பதற்கும் உந்து சக்தியாக விளங்கியவர் திலீபன். எந்த வேலையாக இருந்தாலும் தன்னுடைய அபிப்பிராயத்தைச் சொல்லுவார், இப்படித்தான் செய்ய வேண்டும் என்று எப்போதும் நிர்ப்பந்தப்படுத்தியது கிடையாது. எப்போதும் சாந்தமாகவே இருப்பார். அவர் கோபப்பட்டதை நான் பார்த்ததில்லை. எந்த முடிவு எடுத்தாலும் அது உறுதியான முடிவாக, எந்தத் தழும்பல்களும் இல்லாத முடிவாக இருப்பதை நான் பார்த்திருக்கிறேன். அவர் ஒரு சிறந்த பேச்சாளர். அவருடைய பேச்சைக் கேட்க ஆயிரக்கணக்கில் மக்கள் கூடுவது வழமை. தன்னுடைய சிந்தனைகளை தெளிவாக மக்களிடையே கொண்டு சேர்ப்பதில் வல்லவராக இருந்தார் திலீபன். அரசியற் பிரிவிற்கு பொறுப்பாகவிருந்த திலீபனின் பின்னால் மக்கள் அணிதிரண்டிருந்தனர்.

ஒரு தடவை, அச்சுவேலிப் பகுதியில் சிறு வாகன ஊர்திச் சங்கத்தில் ஒரு பிரச்சினை பூதாகாரமாக வெடித்துவிட்டது. அவர்களில் ஒரு தரப்பினர் எம்மவர்களையும் மற்றைய தரப்பினர் வேறொரு குழுவையும் பேச்சுவார்த்தைக்காக அழைத்திருந்தனர். திலீபன் பிரச்சினையைத் தீர்த்து வைக்கப் போனார். அங்கு டக்ளசும் வந்திருந்தார். அவர்கள் பிரச்சினையை வேறு வழியில் திருப்பி ஒரு கலவரத்தை உண்டுபண்ணுவது போல நடந்து கொண்டனர். அப்போது திலீபனின் திறமையை அருகில் இருந்து பார்த்து நான் வியந்து போனேன். குரலை உயர்த்தவில்லை, தெளிவாக ஆனால் ஆணித்தரமாக பிரச்சினையை விவாதித்தார், கொஞ்சம் நழுவினலும் அவருக்கே ஆபத்தாகிப் போகக் கூடிய சூழ்நிலை. இலாவகமாக, முடிவை சரியான பாதையில் நகர்த்தி பிரச்சினையை முடித்து வைத்தது எல்லோராலும் பேசப்பட்ட ஒன்று. சின்னதும் பெரியதுமாக எத்தனையோ. இப்படி எத்தனையோ.



பொழுது சாய்ந்த பின்னும் வீட்டிற்குப் போகாமல் ஏதாவது வேலைக்காக நாங்கள் துவிச்சக்கரவண்டியில் ஓடித்திரிவது வழமை. வழியில் எங்காவது எங்களை பார்த்துவிட்டால் போதும், அமைதியாக தன்னுடைய கோபத்தை வெளிப்படுத்துவார். அமைதியாக இறங்கி வந்து எங்கள் துவிச்சக்கர வாகனங்களை தன்னுடைய வாகனத்தில் ஏற்றுவார். எதுவும் பேசமுடியாமல் நாங்களும் அவருடைய எல்ப் வாகனத்தில் ஏறிக் கொள்வோம். அவரவர் வீடுகளில் இறக்கி எங்களை பெற்றோரிடம் ஒப்படைப்பார். இதனால் எப்போதுமே பெற்றோரின் பார்வையில் அவர் ஒருபடி உயர்ந்துதான் இருந்தார். எங்களுடைய பாதுகாப்பில் மிகுந்த அக்கறையுடன் எப்போதுமே செயற்பட்டவர் அவர். அது மட்டுமல்லாது, ‘வீட்டிலிருந்து செயற்பட அனுமதிக்கும் பெற்றோரை கவலைப்படவிடாமல் நடந்து கொள்ளுங்கள், அவர்கள் உங்களுக்கு மேலும் மேலும் ஆதரவு தருவார்கள்’ என்பார். அது உண்மை.

“நூறு சதவீத முழுமைத் தன்மையை மற்றவர்களிடம் எதிர்பார்க்காதீர்கள். நீங்கள் உங்களுடைய உண்மைத் தன்மையில் இருந்து சிறிதளவும் பின்வாங்கக் கூடாது. அதேசமயம் அப்படியே மற்றவர்களும் நடக்க வேண்டும் என்று எதிர்பார்த்தால் குழு வேலைகள் எதையும் செய்ய முடியாது. சில சமயங்களில் கொஞ்சம் விட்டுப் பிடிக்கத்தான் வேண்டும்” என்ற அவரது அறிவுரையை இன்றளவும் கடைப்பிடித்து வருகிறேன். அந்தச் சிறிய வயதில் அவரிடமிருந்த ஆழமான சிந்தனைத் தெளிவும் பிரச்சினைகளை அவர்

அணுகும் விதமும் எப்போதும் என்னை வியக்க வைத்திருக்கிறது. தந்தையின் அரவணைப்பில், ஆண் சகோதரர்களுடன் மட்டுமே வளர்ந்த திலீபன் பெண்களை மிகக் கண்ணியத்துடன், மரியாதையுடன் நடத்துவார். இது அவரைச் சூழவிருந்த பல ஆண்களிடையே, குறிப்பாக ஆண் போராளிகளிடையே பாரிய மனமாற்றத்தைக் கொண்டு வந்ததை நாங்கள் கண்கூடாகப் பார்த்திருக்கிறோம். அதேபோல, மக்கள் துன்பப்படும்போது அவரால் அதை சகித்துக் கொண்டு இருக்க முடியாது. அவர் தன்னுடைய முடிவில் உறுதியாக இருந்து நீர்கூட அருந்தாத உண்ணாநோன்பில் இருந்ததில் ஆச்சரியமில்லை. அதே சமயம், முடிவு கிடைக்காமல் அவர் உண்ணா நோன்பை முடித்துக் கொள்ளப் போவதுமில்லை என்பதும் அவரைத் தெரிந்தவர்களுக்குத் தெரிந்திருந்தது.

உண்ணாவிரத மேடையில் அவரை சந்தித்தேன். மிகவும் களைப்படைந்த நிலையில் இருந்தார். 'நிலைமை தெரியுந்தானே! தொடர்ந்து வேலை செய்யுங்கள். நீங்கள் எல்லாரும் இருக்கிறீர்கள் என்ற நம்பிக்கையில்தான் நான் போகிறேன். செய்கிற வேலையைத் தொடருங்கள். நான் போயிட்டு வாறன்' என்றார். கண்ணீர் தாரை தாரையாகப் பெருக செய்வதறியாமல் நிற்கத் தான் முடிந்தது. உண்ணாவிரதம் முடித்து வைக்கப்படலாம் என்ற நப்பாசை எனக்கிருந்தது. திலீபனோ தீர்க்கதரிசனத்துடன், அடுத்து என்ன நடக்கப் போகிறது என்ற தெளிவுடன், தன்னுடைய முடிவில் உறுதியாகவிருந்தார். சுற்றிவளைப்புகளில், சண்டைகளில் என்று எத்தனையோ தடவைகள் சாவின் விழிம்பிலிருந்து தப்பியிருக்கிறார் திலீபன். அகிம்சையின் இருப்பிடம் என மார் தட்டிக்கொள்ளும் இந்தியாவிடம் எமக்கான அடிப்படைக் கோரிக்கைகளை முன்வைத்து அகிம்சை வழியில் மெழுகாக உருகிக் கொண்டிருக்கும் திலீபனை இறக்க விடுவதன்மூலம், தமிழர்களுக்கு எதிரான இந்திய அரசின் கபட நாடகம் வெளிக் கொணரப்படும் என்பதை திலீபன் தெளிவாக உணர்ந்திருந்தார். பல்லாயிரக்கணக்கான மக்களின் முன், அவர்கள் கதறி அழ, எங்களிடமிருந்து விடைபெற்றார் திலீபன். தன்னுடைய உடலையும் யாழ் மருத்துவபீட மாணவர்களின் கற்றலுக்காக ஒப்படைக்க ஒழுங்கு செய்திருந்தார்.

'தமிழ் மக்கள் மிகவும் விழிப்புடன் இருக்க வேண்டும். இல்லையெனில் அவர்களின் எதிர்காலம் இருண்டதாகி விடும்' – இது திலீபன் அடிக்கடி குறிப்பிடும் வார்த்தைகள். திலீபனுக்காக கதறி அழுத மக்கள் வெள்ளம், திலீபன் எவ்வளவு தூரம் மக்கள் மனங்களில் இடம் பிடித்திருக்கிறார் என்பதை உணர்த்தியது மட்டுமல்லாது இந்தியாவின் கபட நாடகத்தையும் மக்கள் புரிந்து கொண்டார்கள் என்பதையும் தெளிவுபடுத்தியது.




இந்த பேரெழுச்சி கொண்ட மக்களின் துணையுடன் உலகிலேயே நான்காவது பெரிய இராணுவத்தைக் கொண்ட இந்தியாவை எம்மால் புறமுதுகிட வைக்க முடிந்தது.

அவர் எவ்வளவு சிறந்த போராளி என்பதை தலைவர் திலீபனைப் பற்றி சிலாகித்துப் பேசுவதிலிருந்து புரிந்து கொள்ள முடியும். ஒரு தடவை தலைவர், 'உங்களுக்குச் சொல்ல வேண்டியதில்லை, நீங்கள் திலீபனுடன் இருந்து வேலை செய்திருக்கிறீர்கள்.' என்றதிலிருந்து தலைவர் திலீபன் மீது எவ்வளவு மரியாதை வைத்திருந்தார் என்பதைத் தெரிந்துகொள்ள முடிந்தது. ஒரு உன்னதமான மனிதனின் காலத்தில், அவருடன் இணைந்து பயணித்திருக்கிறோம் என்பது எனக்குப் பெருமைதான். ஆனால், திலீபன் எந்த இலட்சியத்திற்காக தன்னை உருக்கி தற்கொடையாக்கினாரோ அது இன்னமும் நிறைவேறாமல் தான் உள்ளது. வாருங்கள்! எங்களுக்காக உருகிய திலீபனின் ஆன்மா மீது உறுதி மொழி எடுத்துக் கொள்வோம்! அந்த இலட்சியத்தை நோக்கி ஒன்றிணைந்து பயணிப்போம்!

**மக்கள் புரட்சி வெடிக்கட்டும்!**

**சுதந்திர தமிழீழம் மலரட்டும்!**




## முதன் முதலாக

ஈழநாட்டில் முதலாவது தமிழ்ப்புலவர் என்ற பெருமைக்குரியவர் ஈழத்துப் பூதன் றேவனார். கடைச்சங்ககால புலவர்களில் ஒருவராக இவர் விளங்கினார். அகநானூற்றில் மூன்றும், குறுந்தொகையில் மூன்றும், நற்றிணையில் ஒன்றுமாக மொத்தம் ஏழு பாடல்களை இவர் பாடியுள்ளார்.

ஈழத்து தமிழ் நூல்களுட் காலத்தால் முந்தியது “சரசோதிமாலை” என்னும் சோதிட நூலாகும். போசராச பண்டிதர் என்பவரால் ஆக்கப்பட்ட இந்நூல், மூன்றாம் பராக்கிரமபாகு என்ற சிங்கள மன்னனின் அவையில் 1310ம் ஆண்டில் அரங்கேற்றப்பட்டது.

## பிரச்சனைக்கான தீர்வு எமது கண் முன்னேதான் இருக்கிறது



உலகத்தையே ஜெயிக்க நினைத்த பிரெஞ்சு மாவீரன் நெப்போலியன் கடைசி காலத்தில் பிரிட்டனிடம் தோல்வி அடைந்தார். தோல்வி அடைந்த நெப்போலியனை பிரிட்டிஷ் ராணுவம் சிறைப் பிடித்து ஆப்பிரிக்காவில் தனிமைச் சிறையில் வைத்தது. சிறையில் மன உளைச்சலில் அவரின் கடைசிக் காலம் கழிந்தது. அவரைப் பார்க்க வந்த அவரின் நண்பர் ஒருவர் அவரிடம் ஒரு சதுரங்க அட்டையை கொடுத்து, “இது உங்களின் சிந்தனையை செயல்பட வைக்கும், தனிமையைப் போக்கும்” என்று கூறினார்.

ஆனால் சிறைப்படுத்தி விட்டார்களே என்ற மன உளைச்சலில் இருந்த மாவீரனுக்கு சிந்தனை செயல்படாமல் சதுரங்க அட்டை மீது கவனம் போகவில்லை. சிறிது காலத்தில் இறந்தும் போனார் நெப்போலியன்.

பிற்காலத்தில் பிரான்ஸ் அருங்காட்சியகம் மாவீரன் நெப்போலியனிடம் இருந்த சதுரங்க அட்டையை ஏலம் விட அதை ஆய்வு செய்த போது அந்த அட்டையின் நடுப்பக்கத்தில் சிறிய அளவில் ஒரு குறிப்பு இருந்தது. அதில், அந்த சிறைச்சாலையில் இருந்து தப்பிப்பதற்கான வழியை அந்த குறிப்பு சொல்லி இருந்தது. ஆனால் அவரின் மன உளைச்சலும், பதட்டமும் அவரின் சிந்தனையை செயல்படாமல் ஆக்கி வைத்து அவரின் தப்பிக்கும் வழியை மூடி மறைத்தது. அதைப் போல் உறுதியான சிமெண்ட் தரையையும், மரப்பெட்டியையும் கூட தன் கூர்மையான பற்களாலும், நகத்தாலும் குடைந்து ஓட்டை போடும் தன்மை கொண்டது எலி. ஆனால், அதே மரத்தால் செய்யப்பட்ட எலிப்பொறியில் சிக்கிக் கொண்டால் அதற்கு ஏற்படும் மன உளைச்சலாலும், பதட்டத்தாலும் அந்த எலிப் பொறியை உடைக்கும் வழியை விட்டு விட்டு அந்த பொறியின் பின்னால் இருக்கும் கம்பிக்கு முன்னாலும் பின்னாலும் பதட்டத்துடன் ஓடித்திரிந்து, சிந்தனை செய்ய முடியாத மன உழைச்சலுக்கு ஆளாகி மனிதர்களிடம் மாட்டிக்கொண்டுவிடும். மாவீரனுக்கும் சரி, சாதாரண எலிக்கும் சரி, பதட்டமும், மன உளைச்சலும் அவர்களின் சிந்தனைத் திறனை மழுங்கடித்து, முன்னேற்றத்திற்கான வழியை அடைத்து விடுகிறது. மனுஷனோட பலபிரச்சினைக்கு காரணம், மனஉளைச்சல் தான்! பிரச்சினைக்கான தீர்வு எமது கண் முன்னேதான் இருக்கிறது.

# வரலாற்றில் ஒரு நாள்



# தலைவரின் மதிநுட்பம்

1987ம் ஆண்டு. அக்டோபர் மாதம். யாழ் மாவட்டம் களையிழந்திருந்தது. கடந்த மாதம் 26ம் திகதிதான் இந்தியா திலீபனை இறக்க விட்டிருந்தது. அக்டோபர் 5 இல் புலேந்தி அம்மான் போன்ற மூத்த தளபதிகள் உட்பட 12 இன்னுயிர்ப் போராளிகளை சூழ்ச்சி மூலம் காவு வாங்கியிருந்தது.

போராளிகளிடமிருந்த ஆயுதங்களைக் களைந்து இரண்டு மாதங்களாகும் நிலையில், பெரிதாக என்னவோ நடக்கப் போகிறது என்ற உள்ளுணர்வு தந்த அச்சத்துடனும், அமைதிப்படை என்ற பெயரில் தாயகத்தில் உள்நுழைந்த சதிகாரர்கள் மீதான வெறுப்புடனும் மக்கள் நடைப்பிணங்களாக நடமாடிக் கொண்டிருந்தனர்.

புலிகளை முழுதாக அழிக்க வேண்டும் என்ற எண்ணம் இந்தியாவுக்கு. இந்தியப் படைகளின் கட்டளை அதிகாரியாக இங்கு வந்திருந்தார் ஜெனரல் திபீந்தர் சிங். அவர் ஒரு திட்டம் தீட்டுகிறார். ‘புலிகளின் தலைவர் பிரபாகரனை கைது செய்துவிட்டால் அல்லது அது முடியாமற் போனால் கொன்றுவிட்டால் மனதளவில் புலிகள் பல வீனமாகி விடுவார்கள். அதன் பின் இரண்டு நாட்கள் போதும். யாழ் மாவட்டம் கட்டுப்பாட்டில் வந்துவிடும்.’ அதற்கான திட்டமிடுதல்களில் மும்முரமாக இறங்குகிறார்.

தலைவர் பிரபாகரன் யாழ் கொக்குவிலில் பிரம்படி வீதியிலுள்ள ஒரு முகாமில் இருக்கும் தகவல் உறுதிப்படுத்தப்பட்டுவிட்டது. அந்த இடத்தை பலதடவைகள் இரகசியமாக நோட்டம் விட்டாயிற்று. அந்த வீட்டினதும் அதைச் சூழவுள்ள வீதிகளினதும் துல்லியமான வரைபடத்தை கொடுத்து உதவியிருக்கிறார்கள் மாற்றுக் குழுவினர். இந்திய இராணுவத்திலே அதியுச்ச பயிற்சி பெற்ற பரா கொமாண்டோவினர் 103 பேர் யாழ் பல்கலைக் கழக மைதானத்தில் ஹெலி மூலம் இறக்கப்பட்டு சத்தமில்லாமல் பிரம்படி நோக்கி நகர்வதாகவும் அவர்களுக்கு கள உதவியாக சீக்கிய மெதுரகக் காலாட்படையினர் 100 பேர் யாழ் மருத்துவபீட வளாகத்தில் தரையிறக்கப்பட்டு, அவர்கள் நகர்ந்து சென்று களத்தைக் கட்டுப்பாட்டில் வைத்திருப்பதாகவும் ஏற்பாடு. திட்டம் என்னவோ மிகவும் அருமையானதாகத்தான் இருந்தது.

உயர் மட்டத் தலைவர்களும் இந்திய உயரதிகாரிகளும் கூட்டப்பட்டு திட்டம் அக்குவேறு ஆணிவேறாகப் பிரித்து ஆராயப்பட்டது. திட்டம் கனகச்சிதமாக இருப்பதாக முடிவானது. உண்மைதான். உலகின் 4வது பெரிய ராணுவம். வியூகம் வகுப்பதில் வல்லவர்கள். ஆனால், எமது தலைவரின் மதிநுட்பத்தையும், தாய் நாட்டுக்காக தம் உயிரையே கொடுக்கத் துணியும் போராளிகளையும் அரசியல் அறிவும் நாட்டுப்பற்றும் மிகுந்த மக்களையும் அவர்கள் கணக்கிலெடுக்கத் தவறிவிட்டனர்.

பிரம்படியில் தாக்குதல் நடத்தும் அதே நேரத்தில் இன்னுமொரு பாரிய நடவடிக்கை செய்யவும் அவர்கள் இராணுவத்தைத் தயார் நிலையில் வைத்திருந்தனர். எல்லா முனைகளினூடாகவும் ஆகாய தரை கடல் வழிகள் அனைத்தையும் பயன்படுத்தி, யாழ் நகரினுள் நுழைவது என்றும், குறைந்தது ஒரு விநியோகப் பாதையை என்றாலும் திறந்துவிடவேண்டும் என்றும் தீர்மானித்தனர் அவர்கள். அத்துடன் புலிகளுக்கான சகல தரை, கடல்வழிப் பாதைகளையும் அடைத்து விடவும் முடிவு செய்தனர்.

# வரலாற்றில் ஒரு நாள்

9ம் திகதியன்று இரவு தலைவரின் இடத்தை முன்னோட்டம் பார்ப்பதற்காக புறப் பட்டது சீக்கிய காலாட்படை. திருநெல் வேலியில் இருந்து பிரம்படி வீதி நோக்கி வீதிவழியாகவும் மக்களின் வளவுகளினூடாகவும் சென்ற இரகசிய ரோந்து, பிரம்படி வீதியிலிருந்து 300 மீற்றர் தொலைவிலிருந்த ரயில் பாதையால் திரும்பி வந்து நிறைவடைந்தது.

கனத்த நிசப்தத்தில், இந்திய இராணுவத்தின் திருட்டுத்தனத்தை சரியாகக் கண்டுபிடித்து விட்டார் தலைவர். அவர்களுக்கு சரியான பதிலடி கொடுக்க முடிவெடுத்து திட்டத்தை போராளிகளிடம் விளக்கினார். உள்ளே விட்டு அடி கொடுக்க முடிவெடுத்தார் தலைவர். சம்பவம் நடைபெறுவதற்கு முன்பே தலைவர் பாதுகாப்பான இடத்திற்கு அனுப்பப்பட்டு விட்டார்.

10.10.87 அன்று அதிகாலை 1:15. இரண்டு M18ரக ஹெலிகளில் வந்த பரா கொமாண்டோக்கள் இடத்தை தவறவிட்டு கொக்குவில் கிராமசபைக்கு அருகில் தரையிறங்கினர். தவறான இடம் என்றாலும் அங்கும் பதுங்கியிருந்த போராளிகள் சரமாரியாகச் சுட்டுத்தள்ளினர். சூட்டில் சேதமடைந்த ஹெலிகள் அவ்விடத்தைவிட்டு விரைந்தோடி மறைந்தன. கொமாண்டோக்களில் சிலர் இறந்து விழுந்தனர். இடம் எதுவெனத் தெரியாது திகைத்து சீக்கியப் படையை விரைந்து வருமாறு செய்தியனுப்பினர்.

சரியாக மருத்துவ பீட வளாகத்தில் இறங்குவார்கள் என்ற தலைவரின் கணிப்பின் படி மைதானத்தைச் சுற்றி மறைந்திருந்த போராளிகளுக்கு பரசூட்டில் இறங்கும் சீக்கியர்களை எண்ணியெண்ணிச் சுட்டு வீழ்த்துவது இலகுவாகவிருந்தது. அவர்களின் செய்தித் தொடர்பாளர் கொல்லப்பட்டு விட்ட நிலையில் கொமாண்டோக்களின் கூக்குரல் அவர்களுக்குக் கிட்டியிருக்கவில்லை.

இந்தச் சண்டையில் சீக்கிய காலாட்படையினரில் 29 பேரும் பரா கொமாண்டோக்களில் 8 பேருமாக மொத்தம் 37 பேரைப் பறிகொடுத்ததுடன் திட்டத்தில் படுதோல்வியைச் சந்தித்தது இந்தியா.



அதுமட்டுமல்லாமல் அவர்களின் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும் திட்டத்தையும் சரியாகக் கணித்த தலைவரின் மதிநுட்பத்தினால் பாரிய யுத்தம் வெடித்தும் இந்தியப் படைகளினால் இலக்கை எட்டிப் பிடிக்க முடியவில்லை.

2 நாட்களில் யாழ் வீழ்ந்துவிடும் என்றவர்கள், 2 வருடங்களின் பின் ஆயிரக்கணக்கானவர்களைப் பறிகொடுத்து அவமானத்துடன் சொந்த நாடு திரும்பினர். ஆயுதங்களைக் களைந்து சரியாக இரண்டு மாதத்தில் போராளிகள் மீண்டும் ஆயுதம் தூக்குவதற்கு இந்தியாவே காரணமாகவிருந்தது.

இந்தச் சம்பவம் மட்டுமல்லாது, இந்திய இராணுவத்தினருடனான யுத்த காலப் பகுதியில் தலைவரின் மதிநுட்பம் மிகுந்த தந்திரோபாயங்களும் யுத்த வியூகங்களும் இன்றும் படைத்துறை வல்லுனர்களால் வியந்து பார்க்கப்படுகின்றன.

# ஈழத்துக் கவிஞர்களின் நவீன கவிதைகளில் போரும் போரியல் வாழ்வும்

- அந்துவன் கீரன் -

போர்க்காலத்தில் பலாத்காரம், சித்திரவதை, காணாமல்போதல், கொல்லப்படல், பாலியல் துஷ்பிரயோகம் எனப் பெண்ணுக்கெதிராக நிகழ்ந்த வன்முறைகள் பெண்ணுணர்வை அழித்து அவள் அடையாளத்தைச் சிதைத்தன. இனத்துவ அடிப்படையில் நிகழ்த்தப்பட்ட இவ்வன்முறைகள் பௌதீக நிலையில் உளவியல் தாக்கத்தை ஏற்படுத்தின. தமிழ் மக்களுக்கு எதிரான யுத்தத்தில் அரச வன்முறையினால் கோணேஸ்வரி, கிருஷாந்தி, ஜஜீடா கமாலிட்ட, ராகினி எனப் பலபெண்கள் குதறிச் சிதறடிக்கப்பட்ட வேளையில் ஆக்கிரமிக்கும் அரசபடைகளுக்கு எதிரான பெண்குரல்கள் ஆக்கிரோசமாக எழுந்தன. கிழக்குமாகாணத்தில் மனிதாபிமானத்துக்கு அப்பாற்பட்டு அரச படையினரால் பாலியல் வன்முறைக்குள்ளாகி யோனிக்குள் வெடிகுண்டைச் செலுத்தி குதறிச் சிதைக்கப்பட்ட கோணேஸ்வரியை குறியீடாக்கி எழும் கலாவின் "கோணேஸ்வரிகள்" என்னும் கவிதை உடலின் உதிரப் பிசிறல்களைக் கந்தகநெடி கமழ எடுத்துரைக்கிறது. ஈழத்து நவீன கவிதைத் தடத்தில் இக்கவிதை ஓர் மைல்கல் எனலாம்.

"வீரர்களே
உங்கள் வக்கிரங்களைத்
தீர்த்துக் கொள்ளுங்கள்



என் பின்னால்
என் பள்ளித் தங்கையும் உள்ளாள்
தீர்ந்ததா எல்லாம்
அவளோடு நின்று விடாதீர்
எங்கள் யோனிகளின் ஊடே
நாளைய சந்ததி தளிர்விடக்கூடும்
ஆகவே
வெடி வைத்தே சிதறடியுங்கள்"

வதைகளின் தடவழியே வன்முறையை எதிர் கொள்ளும் ஒரு பெண்ணின் தார்மீகக் குரல் கலா வின் கவிவழியே பிசிறின்றி ஒலிக்கிறது. கொடு மைகளுக்கு எதிரான எதிர்ப்பின் குரலாக எழும் ஆழியாளின் 'மன்னம்பேரிகள்' ஈழத்தின் கவிதை தடத்தில் வதையின் மொழியைத் தத்துருபமாகப் பதிவு செய்த கவிதையாகும்.

1971இல் ஜே.வி.பி. கிளர்ச்சியில் பெண்கள் அணி-க்குத் தலைமை தாங்கி 1971.04.16 அன்று படையி-னரால் கைது செய்யப்பட்டு பாலியல் வல்லுறவுக்கு-ள்ளாகிப் படுகொலை செய்யப்பட்ட 'மன்னம்பேரி', 17.05.1997 இல் அம்பாறையில் சென்றல் முகாம் பொலிசாரினால் வன்புணர்வுக்குப் பின் கணவன் முன்னிலையில் யோனியில் கிரனெட் வைத்து வெடிக்கச் செய்த 'கோணேஸ்வரி முருகேசு', முதலானவரைப் பாடும் இக்கவிதை, வீச்சு மிக்க ஈழத்துக் கவிதைகளில் ஒன்றாகும்.

"காலப்பொழுதுகள் பலவற்றில்

வீதி வேலி ஓரங்களில்

நாற் சந்திச் சந்தைகளில்

பிரயாணங்கள் பலவற்றில் கண்டிருக்கிறேன்.

நாய், கரடி, ஓநாய்

கழுகு, பூனை, எருதாய்ப்

பல வடிவங்கள் அதற்குண்டு.

தந்திக் கம்பத்தருகே

கால் தூக்கியபடிக்கு

என்னை

உற்றுக் கிடக்கும்

அம் மிருகம் துயின்று

நாட்கள் பலவாகியிருக்கும்.

அதன் கண்கள்

நான் அறியாததோர்

மிருகத்தின் கண்களைப் பறைசாற்றிற்று

அவற்றின்

பாலைத்தாகம்

அறியாப் பாஷையை



எனக்குள் உணர்த்திற்று.

அழகி மன்னம் பேரிக்கும்

அவள்

கோணேஸ்வரிக்கும்

புரிந்த வன்மொழியாகத்தான்

இது இருக்கும் என

அவதியாய் எட்டிக்

கடந்து போனேன்."

இத்தடத்தில் எழும் கே.சுதாஜினியின் பிறிதொரு கவிதை பாலியல் வல்லுறவுக்குட்பட்டு சிதைக்க-ப்பட்டு நலிவடைந்த பெண்ணின் உள்ளத்தை பதிவு செய்கிறது.

"ஒழுங்கையில் திடீரென

நாய் குரைக்கும் சத்தம் அது

அசாதாரணமாயிருந்தது

யன்னலூடே பார்க்கிறேன்

படலைக்கருகில் "ஓநாய்க்கூட்டம்"

பத்துப் பன்னிரெண்டென

அவை என்னை
நான் எதனுள் மறைக்க ....
என் தனிமையில் களி கொண்டு
வெடுக்கென என்னில் பாய்ந்தன ஓநாய்கள்
குரல்வளையும் வறண்டு போய்
அதிர மறுத்தது
ஆனாலும் விக்கித்துக் கதறினேன்
ஓநாய்கள் தம் முன்னங்கால்களால்
என் கன்னங்களை
அறைந்தன
தலை கிறுகி வந்தது
கணங்கள் இருண்டு போக
என்னுடல்
இழுத்துச் செல்லப்படகிறது என்
இருட்டறைக்குள் ....
நான் நினைவிழக்கிறேன் ....
என்னுடலெங்கும் காயங்கள்
அசைக்க முடியவில்லை
கிழிந்த உதடுகளிலிருந்து குருதி
வடிந்தது
சிதைந்த என் உடலங்களை
ஒருங்கு சேர்க்கிறேன்
மெதுவாய் நிமிர்ந்து
சுவரில்
சாய்கிறேன்
நான் கிடந்த இடம்- அது
குருதியில் நனைந்திருந்தது
என் இதயம்
அனலாய்க் கொதிக்க
கண்ணீர்
அதன் வடிகாலாய் வழிந்து
உதட்டுக் குருதியை
கழுவிச்
சென்றது"

விபரணப் பாங்கில் அமையும் இக்கவிதை ஈழத்தில் நடந்த துன்பியலின் வடுக்களை நடப்பியல் வாழ்வுக்கூடாக எடுத்துரைக்கிறது. குரூர வெறியாட்டுக்குட்பட்ட பெண்ணின் உடல் வலிகளுடன் கவிதையை படிப்போன் மனதைத்தைக்கும் வண்ணம் எடுத்துரைக்கிறது. மரபுகளை உடைத்து பெண் உணர்வுகளை மையப்படுத்தி எழுந்த இக் கவிதை அச்சம் தரும் சூழலில் நிகழ்காலப் பெண்ணின் இருப்பை ஆவணப்படுத்திக் காட்டிய கவிதை யாகும். ஒக்டோபரில் வந்து விழுந்த கவிதைகள் என்னும் தலைப்பில் 'மூன்றாவது மனிதன்' சஞ்சிகையில் ஆகர்சியாவால் எழுதப்பட்ட கவிதைகள் அனைத்தும் ஈழதேசத்தின் ஒரு காலகட்டத்தின் நிகழ்கால பதிவுகளே ஆகும். வாழ்வுக்கும் சாவுக் குமிடையில் போராடும் ஈழப் பெண்ணின் அன்றாட வாழ்வியலை இக்கவிதைகள் எடுத்துரைக்கின்றன.

"ஷெல்களிலும் சொல்களிலும்
சிதறிப் போகின்ற வாழ்க்கையை
குனிந்து தடவுகின்றேன்
பிரிவு சொல்லிப் போனது
பஸ் வண்டி
காதிற்குள் குடைந்தன
துயர ஓலங்கள்
இருப்பென்றும் இறப்பென்றும்
பச்சோந்தி முகம் காட்டும்
நாட்களின்
மார்பில் உதைத்து
அடிமரம் பற்றி அழுகின்றேன்
தழுவி அணைப்பனவோ
வேட்டொலிகள்"

துயர் படிந்த பூமியின் துன்பியல் குரலாய் ஒலிக்கும் இக்கவிதை நிதர்சன வாழ்வின் வரலாற்றுச் சுவடுகள். உயிர்குடிக்கும் எறிகணைத் தாக்குதல்களாலும் துப்பாக்கிகளின் வெடியோசைகளாலும் அதிர்ந்து கொண்டிருக்கும் ஈழ தேசத்தில் தன் குழந்தைகளுக்கு நிசப்தமான இனிய காலைப் பொழுதைக் கூடக் காட்டமுடியாத ஏக்கம் அம்புலியின் ஏக்கம் "தேடி அலைவாய்" கவிதையில்,

“ஒரு அழகிய காலையை
உனக்கு காட்ட முடியாத
வசந்த காலத்தில்
விளையாட முடியாத
பாலைவன நாட்களையே
உனக்கு பரிசளிக்கிறேன்”

என்னும் அடிகளிற்கூடாக வாழ்வியலின் நடப்பியலாக வெளிப்படுகிறது. குழந்தைக்கு காட்ட முடியாத காலை மைதிலி அருளையாவின் ‘ஒவ்வொரு காலையிலும்’ கவிதையில் படிமங்களுக் கூடான துயரியின் சாட்சியாய் அன்றாட கொடுநிகழ்வின் பதிவாய் துலங்குகிறது.

“ ஒவ்வொரு இரவிலும் கவியும்
சோகை பிடித்துப்போன
கருமையைக் கரைத்த படி
பிழியப்பிழிய அழுது சோர்ந்து
முகம் வெளிறிய குழந்தையாய்த்
தோன்றும் காலை”

இயற்கையைக்கூட பார்க்க முடியாத ரசிக்க முடியாத துர்ப்பாக்கிய சூழலில் யுத்தம் மனித உணர்வுகளைச் சிதைக்கிறது. மனித உறுப்புக்களை காவுகொள்கிறது. ஷெல்லுக்கு இரையாகி குண்டடிபட்டு அங்கவீனப்பட்ட கால்களைப்பாடும் உதயலட்சுமியின் (அம்புலி) குரல் ஈழதேசத்தின் ஒரு கால கட்டத்தின் நிகழ்காலப்பதிவு ஆகும்.

‘எத்தனை களங்கள்
கண்ட என் கால்கள்
செத்தநிலை போல
சவமாகிக் கிடக்கிறதே’

வேதனையின் ரணங்களைப்பாடும்
அம்புலியின்
குரலைப் போன்று
“அம்மா
இன்று நான்
உன்னிடம் வந்த போது
வீட்டு முற்றத்தில் பதித்த என்



பாதச்சுவடு காத்து வை
நாளை நான்
வருவேன் என்பது
என்ன நிச்சயம்”

என நாளைய பொழுதில் மரணத்தை எதிர்கொள்ளத் தயாராக இருக்கும் பெண் போராளியின் பதிவாய் ஒலிக்கும் மன்னார் ரூபி மார்க்கிரட்டின் குரலும் நவீன தமிழிலக்கியத்துக்குப் புதியதே. ஈழத்தில் போர் ஏற்படுத்திய தாக்கம் கொடூரமானது. போரின் வாழ்வில் பலி கொள்ளப்பட்டவர்கள் அநேகர். போர்க்கால அமைதியில் அச்சமும் பீதியும் மனித வாழ்வை வாட்டி, வதைத்த அக்கொடூர கணங்களை நிணமும் சதையுமாக ஆழியாளின் ‘சின்னப்பாலம்’ என்னும் கவிதை பதிவு செய்கிறது.

“போர்க்கால அமைதி
எனது கிராமத்தின்
எஞ்சிய ஊர்மனைகளில்
வெட்ட வெளீரெனக் கிடந்த வயல் வெளிகளில்
சிற்றாறுகள் பின்னி வைத்த
வண்டல் மண் கரைகளில்
சின்னப்பாலத்தின் வெறிச்சோடலில்

ஐந்துவிரல் கொண்டு அறைந்து
 கிடந்தது.
சின்னப் பாலத்தடிக்கு
நித்தம் செட்டை அடித்து வந்தன
வழக்கத்திலும்
கொழுத்த
ஒற்றைக்கால் கொக்குகளும்,
சுழியோடும் நீர்க் கோழிகளும்,
அவற்றில் அதிகமாய்
விளைந்து கிடந்தன
ஊறி அழுகிய பிணங்களின்
வாசன முகர்ந்து, சுவை அறிந்த
ஜப்பான் குறலிகளும்,
குறட்டை பெட்டியான் மீன்களும்,
கபறக்கொய்யாக்களோ
எவ்வித நிர்ச்சலமின்றி
நீரிற் பொசிந்தூறிய மனித கபாலங்களை
ஆளுக்கு ஐந்து ஆறாய்ப்
பங்கிட்டுக் கொண்டன ....
சண்டை சச்சரவின்றி சமாதானத்துடனே"





போருக்குப் பின்னரான அமைதியை ஆழமான படிமத்துக்கூடாக விளக்கும் இக்கவிதை நவீன தமிழ்க் கவிதைகளில் தனித்துவமானது. போரி-னால் உடமையிழந்து, உரிமையிழந்து, வலியிழ-ந்து, அடிமையாய், ஏதுமற்ற ஏதிலிகளாய் வாழும் வாழ்வைக் காட்சிப்படுத்தும் கவிதைகளும் பெண் களால் பாடப்பட்டுள்ளன.

"அவள் அரசின் வன்செயலால் அகதியாகி வந்தி ட்டாள், தொற்று நோய்களின் இருப்பிடம், நோய்க் காவிகளின் உறைவிடம், வயிற்றுப்பசியின் வாழ்வி டம், இதுவே இவள் வதிவிடம். அகதிகளின் நிவா ரணம் அரை வயிற்றுக்கு அடங்காமல் போனதால் அரைவாசி அவிந்த மீனை ஆவலுடன் புசிக்கின்ற-னர், எரியும் வயிற்றுக்குள் புதைக்கின்றனர் "

கவிதை அலங்காரத் தன்மை கொண்ட அதீத வார்த்தைகளுக்கூடாகக் கட்டுண்டாலும் ஈழத் தில் இயங்கும் பெரும்பாலான அகதிமுகாம்களின் உண்மைத்தன்மையை இக்கவிதை காட்சிப் படு-த்துகிறது. 2002 இல் தொடங்கப்பட்ட சமாதான பேச்சுகள் தொடச்சியற்று நின்றுபோய்விட, நிம்மதி யில்லா வாழ்க்கை மீண்டும் தொடரப்போவதை எண்ணி கலங்கும் பெண் உள்ளத்தை நாகபூஷணி கருப்பையாவின் 'மெல்ல மெல்ல' என்னும் கவிதை யில் காணலாம்.

"சந்தோசமாயிருந்த
மனங்கள் மீது
மெல்ல மெல்ல
பதற்றம் தடவியது.
திடீரென்று சமாதானப் பேச்சுகள்
இடை நிறுத்தப்பட்டது.
படுக்கையில்
கனவொன்று
முன் கூட்டியே
நிழலாய் தொடர்ந்தது
....நடுக்கம் வந்து.. என்
உடம்போடு ஒட்டியது.
மீண்டும் -
என் நிம்மதி
காணமல் போய்விடுமோ
என்று"

ஈழத்து நவீனகவிதைகள் புறநானூற்று வீரத்துக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. "கெடுக சிந்தை கடிதிவடுணிவே" என்னும் ஒக்கூர் மாசாத்தியார் பாடலில் வரும் தாய் முதிய மறக்குடியில்



பிறந்தவள். இவளின் தந்தை யானையைக் கொன்று தானும் மாண்டவன். இவளது கணவன் நிரைகளைப் பகைவர் கவர்ந்து செல்லாதவாறு தடுத்து மாண்டவன். அச்சமயம் போருக்கு எழுமாறு பகைவரின் பறையொலி கேட்கிறது. மறப்புகழ் பாற் விருப்பம் கொண்ட அப்பெண் தனக்கிருந்த ஒரேயொரு புதல்வனைக் குடும்பியில் எண்ணை வைத்து வெள்ளிய ஆடையுடுத்தி, போருக்கு அனுப்புகிறாள். இத்தாய்க்கு நிகர்த்த வீரத்தை அ.காந்தாவின் "எந்த மகனுக்காய் என் கால்களை நகர்த்த" என்னும் கவிதையில் காணலாம்.

அடுத்த இதழில் தொடரும்..

# காசி ஆனந்தனின் கவிதைகள்

## விடுதலை

என்னை
உன் ஆயுதம்
ஆக்குவதற்காக
நீ எனக்கு
ஆயுதம்
தந்தாய்
நான்
உன்னையே
சுட்டேன்
தெரிந்துகொள்
எனக்கு
ஆயுதம் தேவைப்பட்டது
நான் இன்னொருவனின்
ஆயுதமாக
இருக்கக்கூடாது
என்பதற்காக




## உணர்வு

தங்க வளையலை
கழற்றி
போராளியின்
கையில்
கொடுத்தாள்.

உங்களிலே
கைகளே
இல்லை

எனக்கு
எதுக்கு
வளையல்?

# புறப்பட்டு வா



ஆணாதிக்கப் புயலால்
அடுப்படியில்
அகதியாகி
தீயோடு
மௌனயுத்தம் நடத்துபவளே!
புறப்பட்டு வா.

தன்னம்பிக்கையை மட்டும்
தைரியத்துடன்
வளர்த்துக்கொள்
உன் விருப்பங்களை
உன் சிந்தனைகளை
சுயமாகச் செயற்படுத்த
சுதந்திரம் கிடைக்கின்றதா?

இல்வாழ்க்கை - இன்று
இல்லாதவர்களுக்கு
இல்லையாம்.
இருபதாம் நூற்றாண்டு
இன்னமும் இதைத்தான்
இயற்றிக்கொண்டிருக்கிறது!

ஊமைகண்ட கனவுபோல
உன் உள்ளத்து உணர்வுகளும்
ஊமையாகும்போது,
உன்னைக் குட்டுபவர்கள்
குட்டக்குட்ட
நீயும் குனிந்து குனிந்து
அங்கே
குசினிக்குள்ளேயே
குமுறிக்கொண்டிருப்பாய்
புறப்பட்டு வா
ஒரு புதுயுகம் படைப்போம்
நாம் தூக்கிய
துப்பாக்கியின் பின்னால்

எம் இதயம் நேசிக்கும்
தேசத்து விடுதலை
எமக்கெட்டும் போது
அங்கே
பெண்ணடிமைக்கு
சமாதி கட்டப்படும்.
சமுதாயத்தின்
பிற்போக்கு சிந்தனைகளுக்கு
புதைகுழி தோண்டப்படும்.

நாளைய
இந்த எழுச்சிக்காக
இன்று நீ எழுந்து வா
அதோபார்
உன்னை நோக்கி
துப்பாக்கியை நீட்டியபடி,
இரத்தவெள்ளத்தில்
உன் உடன்பிறப்பு
பிடித்துக்கொள்
அவள் ஆயுதத்தை!
பின்பற்று
அவள் சுவடுகளை!!

- வானதியின் கவிதைகளிலிருந்து



# உலகம் போற்றும் புரட்சிப் போராளி

## அக்டோபர் 09 சே குவேரா நினைவு தினம்

பொலீவிய நாட்டுக்கெதிராக புரட்சியைத் தூண்டியதாக குற்றம் சாட்டப்பட்டு அவரைக் கைது செய்து ஒரு பள்ளிக் கூடத்தின் அறையில் சிறை வைக்கின்றனர். அது ஒரு அசுத்தமான அறை. அறையின் ஒரு ஓரத்தில் படுக்க வைத்திருந்தார் கள். அவரது கைகள் பின்புறம் கட்டப்பட்டிருக்கின்றன. பரட்டைத் தலை. பிய்ந்து போன காலனிகள். அழுக்கேறிய உடைகள். அந்த அறைக்குள் நுழை கிறார் ஜீலியா கோர்ட்ஸ். இவர் அந்தப் பள்ளியின் ஆசிரியர். சங்கிலியால் கைகள் கட்டப்பட்டுப் படுத்துக் கிடந்த அவ்வீரன் சே குவேரா மெல்ல கண் திறக்கிறார்.

“யாரது?”.

“தங்களுக்கு உணவு கொண்டு வந்திருக்கிறேன்.” மெதுவாக அச்சத்துடன் பதில் கூறுகிறார் ஆசிரியர்.

“இது என்ன இடம்?”

“பள்ளிக் கூடம்.”..

“இத்தனை மோசமாக இருக்கிறதே. இங்கே எப்படி வகுப்புகள் நடத்துகிறீர்கள்? சிரமமாக இல்லையா?”

அந்த நிமிடம். அந்த நொடி அப்படியே உறைந்து போகிறார் ஆசிரியர். மரணத்தின் விளிம்பில் நிற்கும் இவரால் எப்படி, இப்படி ஒரு கேள்வியைக் கேட்க முடிகிறது? வார்த்தைகள் இன்றி மலைத்து நிற்கிறார் ஆசிரியர்.

“கவலை வேண்டாம். ஒரு வேளை நான் பிழைத்திருந்து, புரட்சியும் வெற்றி பெற்றுவிட்டால், உங்களுக்கு ஒரு நல்ல பள்ளிக் கூடம் கட்டித் தருகிறேன்.” என்கிறார் சே.

கொண்டு வந்த உணவை, கீழே வைத்து விட்டு, அழுதபடியே வெளியே ஓடுகிறார் ஆசிரியர்.

தோழர்களே, இவர்தான் சே குவேரா. மரணத்தின் வாயிலில் நின்ற போதுகூட மாணவர்களை உருவாக்கவேண்டிய பள்ளிக்கூடத்தின் அவல நிலை பற்றிக் கவலைப் பட்டவர்தான் சே.

சே குவேராவுக்கு விதிக்கப்பட்ட மரணதண்டனை மறுநாள் அக்டோபர் 9ம் தேதி (1967) நிறைவேற்றப்பட்டது. உலகம் போற்றும் புரட்சிப் போராளியின் மூச்சு அடக்கப்பட்டது.





# லெப். கேணல். விக்டர்

( விக்டர் ஒஸ்கார் )

மருசலீன் பியூஸ்லஸ்

24.11.1963 - 12.10.1986



மூத்த பெண் போராளிகளால் விக்டர் அண்ணா என்றும் ஒஸ்கா என்றும் பாசமாக நினைவு கூரப்படுபவர் லெப் கேணல் விக்டர். தலைவர் எப்படி பெண்களை போராட்டத்தினுள் உள்வாங்கி அவர்களை புடம் போடப்பட்ட போராளிகளாக்கி னாரோ அவ்வாறு, பெண்போராளிகளை தன்னு டைய மாவட்டத்திலே முதலில் சண்டைக் களத் தில் இறக்கி, அவர்களின் மனதில் நிலையான இடத்தைப் பிடித்தவர் விக்டர் அண்ணா. பின்னா-ளில், பல்லாயிரக்கணக்கான பெண்போராளிகள் உலகமே வியந்து பார்க்கும் வகையில் படைத் துறை நுட்பத்துடன் களமாட முன்னோடியாக இருந்ததும், வரலாற்றில் பெண்ணினத்துக்கு பெருமை சேர்த்ததும் வரலாற்றுச் சிறப்பு மிக்க அந்த முதற் சண்டைதான்.

## யார் இந்த விக்டர்?

1983 கறுப்பு ஜூலையின் பின்தான் ஆயுதம் தாங்கிப் போராட வேண்டும் என்ற உணர்வு தமிழ் இளைஞர்கள் யுவதிகளிடையே பெருமளவில் உத்வேகம் பெற்றது. ஆனால், 1981 இன் கடைப் பகுதியிலே போராட்டத்தில் இணைந்துகொள்ளத் துணிந்து விட்டார் விக்டர். பல வழிகளிலும் அவரது உறுதியைச் சோதித்த தலைவர், அவர் திடமான முடிவில் இருப்பதைப் புரிந்துகொண்டு பயிற்சி பெறுவதற்காக முல்லைத்தீவுக் காட்டி-னுள் இருந்த முகாமில் அவரை இணைத்துக் கொண்டார்.

அங்கு ஏற்கனவே பசீர், பொட்டு, ரஞ்சன், கணேஸ், ஆனந்த், லிங்கம் ஆகியோர் இருந்தனர். அவர்க-ளுடன் விக்டரும் இணைந்து கொள்ள, தலைவரே அவர்களுக்கு நேரடியாகப் பயிற்சியளித்தார். பயிற்சியின் பின்னான எஞ்சிய நேரத்தை சீலன், கிட்டு, செல்லக்கிளி அம்மான், ரஞ்சன், புலேந் திரன் ஆகியோருடன் அவர்களின் அனுபவங்-களைக் கேட்டு தன்னை வளர்த்துக் கொள்வதி லேயே செலவளித்தார் விக்டர். இதனாலேயோ என்னவோ அஞ்சாநெஞ்சம் கொண்டவராகவும், எந்த நெருக்கடியான சந்தர்ப்பத்திலும் பதட்டமி ன்றி நிதானமாகச் செயற்படுபவராகவும் அவர் உருவெடுத்திருந்தார்.

திருநெல்வேலி தபாற்பெட்டி சந்தியில் 13 இராணு வத்தினர் கொல்லப்பட்ட தாக்குதலில் தெருவில் குண்டு ( சக்கை ) புதைக்கப்பட வேண்டியிருந்தது. எதுவிதப் பதட்டமும் இல்லாமல் நிதானமாக அதை அவர் செய்து முடித்தது எல்லோராலும் பேசப்பட்ட ஒன்றாக இருந்தது.

M16 கிரனைற் லோஞ்சரும் கையுமாகத் திரி யும் விக்டர், மன்னார் பொலிஸ் நிலையத் தாக்கு-தலிலும் அபார திறமையுடன் செயற்பட்டிருந்தார். மன்னார் மாவட்டத் தளபதியாக இருந்த காலத் தில் தாக்குதல்களில் மட்டுமல்லாது, மக்களை ஒருங்கிணைப்பதிலும் அவர்களின் பிரச்சனை-களைத் தீர்த்து ஒரு வழிகாட்டியாக இருப்பதிலும்



- ரத்தி -

முன்னுதாரணமாக விளங்கினார். இதனால் போராளிகள் மனதில் மட்டுமல்லாது மக்களின் மனதிலும், குறிப்பாக 'விக்டர் மாமா'வாக சிறுவர்கள் மனதிலும் இடம் பிடித்துக் கொண்டார். குழந்தைத்தனமான போக்குக்கொண்ட விக்டரை எல்லோருக்குமே பிடிக்கும்.

முகாம்களிலிருந்து புறப்படும் இராணுவத்தை மீண்டும் முகாம்களுக்குள்ளேயே முடக்கி, மன்னார் மாவட்டத்தை கட்டுப்பாட்டில் வைத்திருந்தார் விக்டர். 12.10.86 அன்று அடம்பனில் இருந்து மக்களின் இருப்பிடங்களை நோக்கி முன்னேறத் தொடங்கிய இராணுவத்துடன் பயங்கர மோதல் வெடித்தது. அவர்களுக்கு உதவியாக ஹெலிகளும் சுழன்று சுழன்று சுட்டன. நாயாற்று வெளியைக் கடந்து தாமரைக் குளத்தினூடாக அடம்பனிற்குள் நுழைந்த இராணுவத்தை எதிர்த்து சமராட





தன்னுடைய நெறிப்படுத்துகையின் கீழ், சாஜகான் தலைமையில் பெண் போராளிகளின் பிரிவொன்றை இறக்கினார் விக்டர். அதுதான் பெண் போராளிகளின் முதற் களம். அதுவே விக்டரின் கடைசிக் களமாகவும் அமைந்துவிட்டது.

பல களங்கள் கண்ட அந்த மாபெரும் போராளியை இதயத்தைத் துளைத்த குண்டொன்று எம்மிடமிருந்து பிரித்தது. தலைவருக்கு பக்கபலமாகவும் உறுதுணையாகவும் இருந்த விக்டர் வீரச்சவடைந்து லெப் கேணல் விக்டர் ஆனார். இயக்கத்தின் முதலாவது லெப்டினன்ட் கேணல் இவராவார். இவர் வீரச்சாவடைந்த சண்டையில்தான் முதன்முதலாக இரண்டு சிறிலங்கா இராணுவ வீரர்கள் சிறைப்பிடிக்கப்பட்டனர். ஒரு போராளியின் வீரச்சாவிற்கு இலட்சக்கணக்கில் மக்கள் கூடியதும் கதறியழுததும் விக்டரின் இறுதி நிகழ்வில்தான் நடந்தது. அவருடைய உடல் போகும் வீதியெங்கும் பல்லாயிரக்கணக்கான மக்கள் கதறியழுதபடி பூத்தூவி அஞ்சலி செய்த நிகழ்வை யாரும் மறந்துவிட முடியாது.



# தமிழீழ பெண்கள் எழுச்சி நாளில் சபதம் செய்யுங்கள்

தரணியில் பெண்கள்
தலைநிமிர்ந்த நன்னாள்
அடக்கு முறை வாழ்க்கை
அடங்கி போன நாள்
சாதனைப் பெண்களாய்
சரித்திரம் பேசிய நாள்
தலைவன் வழியில் திரண்டு
சத்திய வேள்வியில் தம்மை
இரும்பையொத்த மனதுடன்
இயல்பு வாழ்க்கை மறந்து
விடுதலை வேங்கையாய்
வீறு கொண்டு எழுந்த நாள்

சூரியப்புதல்விகளாய்
சுடர் விட்ட நாள்
உலகமே வியந்த
உன்னத தலைவன் அணியில்
பெருமையாக சாதனை பல
சாதித்த வீரமிகு பெண்களாய்
தலை நிமிர்ந்த நாள்

ஆனாலும்
யுத்த மௌனத்தின் பின்
பெண் அடையாளமற்று
ஆற்றவும் தேற்றவும்
ஆறுதல் தரவும் யாருமின்றி

அக்கினிப்பறவையாய்
முயன்று முன்னேறும்
சூரியப் புதல்விகளை
மண்ணில் புதைக்காது
வாழவிடுங்கள்
மனங்களை ரணமாக்கி
நடத்தையை மாசுபடுத்தி
கூச்சமின்றி கூறுபோட்டு
கூவித் திரியாமல்
புனிதர்கள் வாழ்ந்த
புண்ணிய பூமியின்
மகத்துவம் போற்றும்
மண்ணில் பிறந்த நாம்
தன்னிகரில்லா தலைவன்
வழியில் பெண்களை மதித்து
பெருமைசேர்ப்போம் என
தமிழீழ பெண்கள் எழுச்சி
நாளில் சபதம் செய்யுங்கள்!



**கலை**

# கேள்வி-பதில்

**தமிழீழ விடுதலைப்புலிகளின் மகளிர் படைப்பிரிவு பற்றிய சில தகவல்கள்**

1.விடுதலைப்புலிகள் மகளிரணியின் முதற் பயிற்சிப்பாசறை எங்கே நடைப்பெற்றது?

இந்தியாவில் திண்டுக்கல் மாவட்டத்தில் சிறுமலைப்பகுதியில் நடைபெற்றது.

2, இப் பயிற்சி ஆரம்பிக்கப்பட்ட ஆண்டு எது?

1985.ஆவணி.18

3.விடுதலைபுலிகள் அணியின் பெண்கள் பாசறை எத்தனையாவது பயிற்சி முகாம்?

7வது முகாம்

4. விடுதலைப்புலிகள் பெண்கள் அமைப்பில் முதல் மாவீரர் யார்?

2வது லெப் மாலதி

5. இவர் வீரச்சாவடைந்த நாள் எது?

10.10.1987

6 . இச் சம்பவம் எங்கு எப்போது நடைப்பெற்றது?

கோப்பாய்க்கும் நாவற்குழிக்கும் இடையில் இந்திய அமைதிப்படையின் உடனான யுத்தத் தின் போது நடைபெற்றது.

7. முதலாவது பெண் தரைக் கரும்புலி யார்? சம்பவம் என்ன?வீரச்சாவடைந்த திகதி?

மேஜர் யாழினி,ஜெயச்சிக்குறு விநியோக மையத் தாக்குதலின் போது 06.10.1997

8. முதல் பெண் கடற்கரும்புலியார்?தாக்குதல் சம்பவம்,வீரச்சாவடைந்த நாள் எது?

கப்டன் அங்கயற்கண்ணி 16.08.1994 யாழ் காங்கேசன்துறை கடற்பரப்பில் கட்டளைக-ப்பல் தாக்குதல்

09.தமிழீழ பெண்கள் எழுச்சி நாள் ஆரம்பித்த நாள் எது?

10.10.1995

10. மட்டக்களப்பு மாவட்டத்தில் வீரச்சாவடை ந்த முதல் விடுதலைப்புலி பெண் மாவீரர் யார்?

லெப்.அனிதா

தகவல் தொகுப்பு :

**பவானி**



**பெண்கள் சம உரிமை பெற்று சகல அடக்குமுறை களிலிருந்தும் விடுதலை பெற்று ஆண்களுடன் சமத்துவமாக கௌரமாக வாழக்கூடிய புரட்சிகர சமுதாயமாகத் தமிழீழம் அமைய வேண்டும் என்பதே எனது ஆவல்.**

**தமிழீழத் தேசியத்தலைவர்**
**மேதகு வே. பிரபாகரன்**

# பெயரிலி கவிஞன்

ஆஸ்திரேலியாவில் ஒரு நகரில் மருத்துவமனையின் முதியோர்நல சிகிச்சை பிரிவில் ஒரு முதியவர் காலமானார். அவரிடம் மதிப்பான எதுவும் இல்லை என்றுதான் நினைத்தார்கள். பின்பு செவிலியர் அவர் விட்டுசென்ற சொற்பமான பொருட்களை சோதனையிட்டால் கிடைத்தது ஒரு “கவிதை”. அதன் தரமும் பொருளும் கவனத்தை ஈர்த்ததால் மருத்துவமனை செவிலியர் அனைவருக்கும் நகலெடுத்து கொடுத்தனர்.

பின்பு அதை மெல்போர்னுக்கு எடுத்து வந்த ஒரு செவிலியர், இளையோர் அனைவருக்குமான அந்த முதியவரின் சொத்தான கவிதையை மனநலம் சார்ந்த ஒரு பத்திரிக்கையின் கிருஸ்துமஸ் பதிப்பில் வெளியிட்டார். ஒரு காணொளி கோவையும் இந்த எளிய, ஆனால் தெளிவான கவிதையை வைத்து தயாரிக்கப்பட்டது.

இந்த முதியவர், உலகிற்கு பொருளேதும் விட்டு செல்லவில்லை என்றாலும் ‘பெயரிலி’ கவிஞனாக இணையத்தில் உலகை வலம் வருகிறார்.

இதுவே அந்தக் கவிதை.

### எரிச்சலூட்டும் முதியவனா?!

என்ன பார்க்கிறீர் செவிலியரே? என்ன பார்க்கிறீர்?
என்னை பார்க்கும்போது என்ன நினைக்கிறீர்?
மண்டையில் ஏதுமில்லா - எரிச்சலூட்டும்
முதியவன் என்றா?

எங்கோ வெறிக்கும் கண்களுடன்..
எக்குதப்பான தடுமாற்றங்களுடன்..
வாயில் வழியவிடும் உணவுடன்..
வாய்மொழியற்ற பார்வையுடன்..

உங்களை, நீங்கள் செய்வதை கவனிக்காமல்..
எங்கோ ஒரு வெளியில் -
எல்லாம் இழந்துகொண்டிருக்கும் நிலையில்..
‘உன்னால் முடியும் செய் பார்க்கலாம்’ – என
உரக்க நீங்கள் என்னிடம் சொல்லும்போதும்..

எதிர்ப்போ இல்லையோ..
எனக்கு உங்களது சேவைகளாய் -
உணவூட்டி உடல்துடைத்து..
என் நாளை நிரப்பிக்கொண்டிருக்கும் நீங்கள் -
என்னை பார்த்து அப்படித்தான்
எண்ணியிருப்பீர்கள்!

அப்படி என்றால்..
நீங்கள் உண்மையில் என்னை பார்க்கவில்லை..
கண்ணை திறவுங்கள் தாதியரே!
உங்கள் சொற்படியே நடந்துகொண்டு..
நீங்கள் தருவதையே சாப்பிட்டுக்கொண்டு..
இதோ அசைவின்றி அமர்ந்துகொண்டு
நான் யாரென சொல்கிறேன்.. கேளுங்கள்!

பெற்றோரும் உடன்பிறந்த
சகோதர சகோதரிகளுடன்
அன்பால் இணைந்த
பத்து வயது குழந்தையாகவும்...
பின்பு சிறகு முளைத்து பறக்கும் மனதுடன்
காதலை கண்டுகொண்டு கனவுகளுடன்
எனது பதினாறிலும் இருந்தேன்!

இருபதில் இணையை தேடிகொண்டேன்!
இதயம் துள்ளிக்குதிக்க
இன்றும் இனிமையாய் ஒலிக்கிறது
நான் எடுத்துக்கொண்ட கல்யாண
உறுதிமொழிகள்...

என்துணை தேடும் மகவுகளுடன்
மனமகிழும் வீடும் அமைந்து இருந்தது
அதோ என் இருபத்தைந்தில்..
முப்பது வயது மனிதனாக



வேகமாய் வளரும் குழந்தைகளின்
நெருங்கிய பாசப்பிணைப்பை உணர்ந்தேன்!

நாற்பதில் இளைஞரான என் மகன்கள்
வளர்ந்துவிட்டதால் விட்டு சென்றார்கள்..
நான் கலங்கி போகாமல்
பார்த்துக்கொண்டதென்னவோ
எனது அருகிலேயே இருந்த துணைவிதான்..

ஐம்பது வயது ஆனது.. மீண்டும் குழந்தைகள்
என் காலை சுற்றி விளையாடின..
ஆனால் எனக்கும் எனது இணைக்கும்
குழந்தைகளை பற்றிதான் தெரியுமே!

எனக்கு இருண்ட காலம் உதித்தது..
என் மனைவி மறைந்துபோனாள்..
எதிரே என் காலத்தை பார்க்கிறேன்..
நெஞ்சை உலுக்குகிறது உதறல் எடுக்கிறது..

என் மகவுகளின் கவனிப்புகளெல்லாம்
அவர்களின் மகவுகளுக்கே!
எனது வருடங்களை..
அதிலிருந்த அன்பை நினைத்துப்பார்க்கிறேன்!
இப்போது நான் முதியவன்...
இயற்கை கொடூரமானது –
அது எள்ளிநகையாடி
முட்டாளாக்கும் முதுமையை திணிக்கிறது..

வனப்பையும் வீரியத்தையும்
உதிர்கிறது என் உடம்பு
இதோ கல்லான இதுகூட
இதயமாய் இருந்ததுதான் ஒருகாலத்தில்..
ஆனால் பிணம்போன்ற இந்த உடலில்
உள்ளேயொரு இளைஞனாக இன்றும்
இழைந்துகொண்டேதான் இருக்கிறேன்!

உழைத்து ஓய்ந்துவரும் இதயம்
வீங்கி ஏங்குகிறது..
அந்த மகிழ்ச்சிகளும் வலிகளும்
நீங்காமல் நிலைக்கிறது..
வாழ்க்கையை அனுபவித்து
மீண்டும் வாழ நினைக்கிறது..

கடந்த வருடங்கள் என்னவோ சிலதுதான்..
ஆனால் விரைந்து கழிந்து போனதே..
எதுவும் நிலைத்திருக்க முடியாது என்ற
எளிய அறிவை இங்கு ஏற்கவைக்கிறது..

ஆகவே கண்களை திறவுங்கள் மக்களே
திறந்து பாருங்கள்..

இங்கே எரிச்சலூட்டும் முதியவனில்லை
உற்று நோக்குங்கள்..
பாருங்கள்...

நான்!

அடுத்தமுறை வயதானவரை பார்க்கும் போது இந்த கவிதையை நினைவுகொள்ளுங்கள். உள்ளே இருக்கும் இளமையான ஆத்மாவை வெளித்தோற்றத்தை வைத்து உதாசீனம் செய்துவிடாதீர்கள். நாமெல்லோரும் ஒருநாள் இப்படித்தான் இருக்கப் போகிறோம், இல்லையா?

இதை பகிர்ந்துகொள்ளுங்கள். (மூலம் பில்லிஸ் மக்கோர்மாக் தழுவல் டேவ் கிரி/பித்)

உலகின் மிகவும் அழகான சிறந்த விஷயங்களை பார்க்கவோ, கையால் தொடவோ முடியாது. மனதிலிருந்து உணர்ந்து பார்க்கவே முடியும்!

- முன்னுரையும் கவிதையும் தமிழாக்கம்

Dr.Surya C

# இளம்பெண்ணிற்கு நீதி வழங்கிடு!

- மே பதினேழு இயக்கம்

டில்லி காவல்துறையில் பணிபுரிந்து வந்தவர் ராபியா சைபி (Saifi). 21 வயது இஸ்லாமிய இளம்பெண்ணான இவர் கூட்டுப் பாலியல் வன்முறைக்கு உள்ளாக்கப்பட்டு, மிக மோசமான நிலையில் உடல் சிதைக்கப்பட்டு கொல்லப்பட்டுள்ளார். ஆனால், காவல்துறையை சேர்ந்த ஒருவரது கொலையை காவல்துறையே மூடி மறைக்கும் வேலையில் ஈடுபட்டுள்ளது. ராபியா சைபி கொலைக்கு நீதி கிடைக்க வேண்டுமென்றும், இத்தகைய கொடூரமாக செயலை செய்த உண்மை குற்றவாளிகளை உடனடியாக கைது செய்ய வேண்டுமெனவும் மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது.

ராபியா சைபி கடந்த ஆகஸ்ட் 27 அன்று காணாமல் போயுள்ளார். மூன்று நாட்களுக்கு பிறகு பரிதாபாத் நகர் அருகே பிணமாக கண்டெடுக்கப்பட்டுள்ளார். அப்போது அவரது உடல் மிகக் கொடூரமாக சிதைக்கப்பட்ட நிலையில் இருந்தது. அவரை குறைந்தது 4 நபர்களாவது கூட்டுப் பாலியல் வன்புணர்வு செய்து கொன்றிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. உடலில் 50-க்கும் மேற்பட்ட கத்தி குத்துகள் உள்ளன. உடல் கிழிக்கப்பட்டுள்ளது. மார்பகங்கள் வெட்டப்பட்டுள்ளன. பெண்ணுறுப்பு மிக மோசமான நிலையில் சிதைக்கப்பட்டுள்ளது. இப்படியான கொடூர செயலை கண்ட பிறகும் காவல்துறையும், ஊடகங்களும் இதில் கவனம் செலுத்தவில்லை என்பது தான் அதிர்ச்சியளிக்கிறது.

இந்த செய்தி வெளியுலகிற்கு தெரிந்த பிறகு, ஒருவர் தன்னை ராபியா சைபியின் கணவர் என்றும், தான் தான் அவரை கொன்றதாகவும் காவல்துறையிடம் சரணடைந்துள்ளார். ஆனால் ராபியா சைபி இற்கு திருமணம் நடைபெறவில்லை என்றும், இதன் பின்னால் மிகப்பெரிய சதி உள்ளதென்றும் அவரது குடும்பத்தினர் கூறுகின்றனர். காவல்துறை இந்த வழக்கில் முக்கியத்துவம் செலுத்தாததும், செய்தி ஊடகங்களின் புறக்கணிப்பும் இதன் பின்னால் மிகப்




**தண்டனையால் மட்டுமே குற்றங்களை தடுத்துவிட முடியாது. பெண்களை மதிக்கும் வகையில் சமூகத்தில் மாற்றத்தை உண்டாக்குவதால் மட்டுமே தீர்வை வழங்க முடியும்**

பெரிய சதி இருப்பதையே உணர்த்துகிறது. அவரது பணியில் ஏற்பட்டுள்ள சிக்கலே இதற்கு காரணமாக இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படுகிறது.

டில்லியில் நிர்பயா பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு கொடூரமாக கொல்லப்பட்ட சம்பவத்திற்கு எவ்விதத்திலும் இச்சம்பவம் குறைந்ததில்லை. ஆனால், அச்சம்பவம் ஏற்படுத்திய தாக்கத்தில் சிறிதளவு கூட இச்சம்பவம் ஏற்படுத்தவில்லை என்பது அதிர்ச்சிக்குரியதாக உள்ளது. இஸ்லாமியர் என்பதாலேயே அவர் கொடூரமாக கொல்லப்பட்டிருக்கலாம் என்று சொல்லப்படுகிறது. மேலும், குற்றவாளி இஸ்லாமியர் என்றால் சிறு பிரச்சனையை கூட பெரியளவிற்கு மாற்றும் பா.ஜ.க மற்றும் அதன் சார்பு ஊடகங்கள் அமைதியாக இருப்பது நம் சந்தேகத்தை வலுப்படுத்துகிறது.

பெண்கள் மீதான குற்றங்கள் முறையாக விசாரிக்கப்படுவதும் இல்லை, குற்றவாளிகளுக்கு தண்டனை பெற்றுத்தருவதும் இல்லை. குற்றவாளிகள் பாதுகாக்கப்படுகின்றனர். இதனாலேயே பெண்கள் மீதான குற்றங்கள் அதிகரிக்கின்றன. மேலும் இஸ்லாமிய பெண் என்பதால் இக்கொலை இந்திய ஊடகத்தில் முக்கியத்துவம் பெறவில்லை என்பது அவமானத்திற்குரியது.

ராபியா சைபி கொல்லப்பட்டது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்று. அவரது கொலையில் சதி இருப்பதும் தெரியவருகிறது. இதன் பின்னணியை ஆராய்ந்து உண்மை குற்றவாளிகளை கைது செய்து கடுமையான நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது.

நிர்பயா சட்டம் கொண்டு வந்த பின்பும் இது போன்ற சம்பவங்கள் தொடர்ந்து நடைபெறுவது, தண்டனையால் மட்டுமே குற்றங்களை தடுத்துவிட முடியாது என்பதையே காட்டுகிறது. பெண்களை மதிக்கும் வகையில் சமூகத்தில் மாற்றத்தை உண்டாக்குவது மட்டுமே தீர்வை வழங்க முடியும். அதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது.

**பெண்கள் மீதான வன்கொடுமைகளைக் கண்டிக்கும் அமைப்புகள் தென்தமிழீழத்தில் பாலியல் வல்லுறவு கொள்ளப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்ட எம் பிள்ளைகளின் விடயத்திலும் அக்கறை கொள்ள வேண்டும்.**

**பிள்ளையான் குழுவால் பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு சித்திரவதை செய்து துண்டு துண்டாக வெட்டிக் கொல்லப்பட்ட பிறேமினி தனுஷ்கோடி, டெலோ இயக்கத்தைச் சேர்ந்த ஜனா தலைமையிலான குழுவால் பாலியல் வன்புணர்வு செய்து நிர்வாணமாக வீதியால் கொண்டு சென்று கொலை செய்து வாவியில் வீசப்பட்ட விஜி என்றழைக்கப்படும் அனுஷியா நல்லதம்பி, ஈ.பி.ஆர்.எல்.எப் ஐச் சேர்ந்த முன்னைநாள் மாகாணசபை உறுப்பினர் துரைரட்ணம் தலைமையிலான குழுவால் கடத்தி பாலியல் வன்புணர்வு செய்யப்பட்டு கொலை செய்து காணாமல் ஆக்கப்பட்ட காத்தான்குடியைச் சேர்ந்த ரிபாயா போன்ற பெண்களிற்கு நடந்த கொடுமைகளிற்கும் நீதி வழங்கப்படவேண்டும்.**



சிறுகதை

# நிறுவேங்கள் அழுகை



அஜந்தி

“ அப்பா! ஒரிகாமி எண்டா என்னப்பா?”

“ இதென்ன இண்டைக்குப் புதுசா ஒரு கேள்வி. ஒரிகாமியைப் பற்றி? எங்க பாத்தனீ?”

“ விதம் விதமா உருவங்கள் செய்யலாம்.. அதுகும் பேப்பரிலை.. எல்லாம் வடிவா இருக்கு. உங்களுக்குச் செய்யத் தெரியுமாப்பா?”

“ ம்.. என்ன கேட்டனீ?. எனக்குச் செய்யத் தெரியுமா எண்டா? .ம். செய்யலாம்” அப்பா மழுப்பினார்.

“ நீங்கள் சும்மா சொல்லுறியள். உங்களுக்குத் தெரியாது. பேப்பரிலை செய்ய வேணும் .. ஆனா பேப்பரை வெட்டவோ ஒட்டவைத்த கூடாது.. அது ஒரு கலை அப்பா”

“ சரி! ஒத்துக்கொள்ளுறன். அந்தக் கலை எனக்குத் தெரியாதுதான். ஆனா.. அதோடை தொடர்பான ஒரு உண்மைக் கதை இருக்கு. அது எனக்குத் தெரியும்..”

கதை என்றதுமே ரேகா ஆர்வமானாள்.

“ என்ன கதை அப்பா? இப்பவே சொல்லுங்கோ. உடனயே சொல்லுங்கோ ப்ளீஸ்.. !”

“ சரி சொல்லுறன். அதுக்கு முதல் நீ ஒரு வேலை செய்..”

“ என்னப்பா ? சொல்லுங்கோ..”

“ கூகுளில சடாகோ சசாகி ( Satako Sazaaki ) எண்ட பேரைப் போட்டுப் பார்.”

“ இந்தா உடனையே பாக்கிறன்.”

அவசரம் அவசரமாக, அப்பா சொன்ன பெயரைப் பதிவு செய்து தகவல் தேடுகிறாள்.

“ கண்டிட்டன் அப்பா!”

“ என்ன இருக்கு?”

“ A Japanese girl who became a victim of atomic bombs of Hiroshima when she was two years old and died on 25th October 1955 at the age of twelve இப்பிடித்தானப்பா போட்டிருக்கு. இதுக்கும் ஒரிகாமிக்கும் என்னப்பா சம்பந்தம்?”

“ இருக்கு. அதைத்தான் இப்ப சொல்லப் போறன்”

“ சரி..! சொல்லுங்கோ ”

ஆர்வம் மேலிட அப்பாவுக்கு முன்னால் அமர்ந்து கொண்டாள் ரேகா.

கற்பனை செய்து கூடப் பார்க்க முடியாத பேரதிர்வொன்றின் சுழற்சியில் முற்றிலும் பொடிப் பொடியாகிப் போனது போன்ற ஒரு பரிதவிப்பில் ஹிரோஷிமா நகரம் தத்தளித்துக்கொண்டு இருக்கிறது.

“ ஐயோ! என்ன நடக்கிறது? என் அம்மா எங்கே?”

“ எங்கே என் கணவர்? எங்கே என் குழந்தை?..”

“ எங்கே என் குடும்பம்? எல்லோரும் எங்கே? என்ன நடந்துவிட்டது?”

முடிந்தவர்கள் மட்டும் இப்படிப்பட்ட அவலக் கூக்குரல்களை எழுப்பியபடி அங்குமிங்கும் கலைந்து ஓடிக் கொண்டிருக்க – மடிந்து போனவர்கள் ஆயிரங்களில் சிதறுண்டு கிடக்கிறார்கள்.. ஏறத்தாழ எண்பதினாயிரத்திற்கும் அதிகமான குடி மக்கள்.!”

“ எண்பதினாயிரம் சனங்களா?. என்னப்பா சொல்லுறியள்?. அப்பிடி என்னதான் நடந்தது?”

“ ஜப்பானுக்கு மேலை அமெரிக்கா போட்ட அணுகுண்டு!”

“ அது ரெண்டாம் உலகப் போரில தானே.?”



“ ம். அப்போ நடந்த கதைதான் இது ”

எங்கும் புகை மண்டலம். நாலா புறமும் மரண ஓலங்கள். அன்று – 1945 ஓகஸ்ட் 06.

“ ஐயையோ!! எனது குழந்தை எங்கே?”

பதட்டத்தில் கத்திக்கொண்டு வீட்டுக்கு வெளியே ஓடுகிறாள் ப்யூஜிகோ. சற்றுத் தூரத்தில் வெளியே வீசப்பட்டுக் கிடக்கிறது அவளுடைய இரண்டு வயசுக் குழந்தை!

“ கடவுளே!! என் குழந்தை என்னை விட்டுப் போய் விட்டதே!. ”

கதறியபடி குழந்தையை வாரி எடுக்கிறாள்.

சாதாரணமாய்த் தூங்குவது போல அமைதியாய்க் கிடக்கிறாள் குழந்தை சடகோ. அம்மாவின் அரவணைப்பில் மெது மெதுவாய்க் கண்கள் திறந்து பார்த்த குழந்தையைக் கடவுள் தந்த வரமாய் நினைக்கிறாள் ப்யூஜிகோ.

“ கடவுளே!. உனக்கு நன்றி. என் குழந்தை க்கு எதுவுமே நடக்கவில்லை.”

ஆனந்தக் கூச்சலிட்டபடி குழந்தையுடன் உள்ளே ஓடுகிறாள். அவளுடைய தாயாரைக் காணவில்லை.

யோசிக்க நேரமில்லை. பயத்தில் உறைந்து போய் நின்ற மகனையும் கூட்டிக்கொண்டு வெளியே ஓடுகிறாள் ப்யூஜிகோ.

எங்கும் புகை மழை!

ஓடிக் களைத்து, ஆற்றங்கரையை அடைந்த பின், சற்று ஓய்வாக நிற்க முடிந்தது.

“ என் குழந்தைக்கு ஒன்றும் ஆகவில்லை.”

மறுபடியும் மறுபடியும் மனசுக்குள் சொல்லிச் சொல்லி ஆறுதல்படுகிறாள். உண்மையில் அந்தக் குழந்தைக்கு எதுவுமே ஆகவில்லையா?

சடாகோ வளர்கிறாள். படிப்பில் கெட்டிக்காரி. விளையாட்டிலும் வீராங்கனை.

தொடர்ந்து வந்த ஆண்டுகளில், அணுகுண்டின் கதிர்வீச்சுக்கு ஆளாகிய சிறுவர்களும் பெரியவர்களும் பல்லாயிரக்கணக்கில் நோய் வாய்ப்படுவதும் இறந்து போவதும் நிகழ்ந்து கொண்டிருந்த போதெல்லாம் சடாகோ உடல் நலத்துடன் இருப்பதை எண்ணி ப்யூஜிகோவின் மனம் அவ்வப்போது நிம்மதிப்படும்.

அப்போதுதான் அது நடந்தது.

" என்னப்பா நடந்தது?"

ரேகாவின் குரலில் பதற்றம்.

" சொல்லுறன். "

ஒரு நாள் மைதானத்தில் விளையாடிக் கொண் டிருந்தபோது, சடாகோ மயக்கமடைந்து கீழே விழுந்து விடுகிறாள். மருத்துவமனையில் அவளைப் பரிசோதித்த டொக்டர்கள் அவளுக்குப் புற்றுநோய் என்பதையும், அது உடலில் வேகமாகப் பரவிக் கொண்டிருப்பதையும் உறுதிப்படுத்தினார் கள். பத்து வருடங்கள் தாண்டியும் அணுகுண்டின் கதிர்வீச்சு தன் வேலையைக் காட்டத் தவற வில்லை.

" ம்.. ம்.."

அப்பா கவலையுடன் பெருமூச்சு விடுகிறார்.

" இப்பிடி எத்தினை ஆயிரம் பேர் யப்பானிலை பாதிக்கப் பட்டிருக்கினம்.."

அப்பா இப்படிச் சொன்னதைக் கேட்டு ரேகாவின் முகத்திலும் கவலையின் ரேகைகள்.

ஒருநாள் சடோகாவின் பள்ளிக்கூட நண்பன் சிசுகோ ( Chizuko ) அவளைப் பார்க்க மருத்துவ- மனைக்கு வருகிறான். சடேகா உயிர் பிழைக்க முடியாது என்று அவனுக்குத் தெரியும். அவளு- க்கும் அது தெரியும். உயிராய்ப் பழகிய நண்பியை நிரந்தரமாகப் பிரியப் போகிறோமே என்ற கவலை அவன் கண்களில் தெரிந்தது.

" என்ன சிசுகோ! என்ன அப்படிப் பார்க்கிறாய்?"

" ஒன்றுமில்லை. நீண்ட நாட்களாக உன்னைக் காணவில்லை.. அதுதான்."

சடோகா எதுவும் பேசவில்லை. கவலையுடன் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்..

" வகுப்பறையிலும் விளையாட்டு மைதானத்தி லும் நீயில்லாமல் உனக்காக என் மனம் ஏங்குகி றது சடோகா!"

இப்படிச் சொன்னவன், தன் பையினுள் கைவிட்டு ஒரு காகிதக் கொக்கை வெளியே எடுக்கிறான்.





" இந்தா.. இதை வைத்திரு.."

" என்ன இது.? கொக்கு?.. "

சடோகாவின் குரலில் ஆச்சரியம்.

" இது உனக்காக எனது பரிசு. நோயு- ற்றிருப்பவர்கள் இது போல ஆயிரம் கொக் குகளைச் செய்து கடவுளிடம் சமர்ப்பித்து வேண்டு- தல் செய்தால் நோய் குணமாகும் என்று அறிந் தேன்."

சடோகாவின் கண்கள் மகிழ்ச்சியில் விரிந்து நண்பனுக்கு நன்றி சொன்னபோது ஓரங்களில் திரண்ட இரண்டு நீர்த்துளிகள் கீழே விழுந்து தெறித்தன.

அவளுடைய வேண்டுதல் பயணம் அடுத்த நிமி டமே ஆரம்பமாயிற்று. வீசப்படுகின்ற மருந்துச் சிட்டைகள், அன்பளிப்புகளைச் சுற்றி வரும் கட- தாசிகள், முடிந்து போன மருந்துப் போத்தல் களின் லேபல்கள்.. எல்லாமே சடோகாவின் கை வண்ணத்தில் கொக்குகளாய்ப் பிறப்பெடுத்தன.

பல சமயங்களில் நோயின் தாக்கம் எதையும் செய்ய விடாமல் களைப்புக்குள் தள்ளும். களை- ப்பைத் தூக்கி வீசி, கைகள் கொக்குகளைச் செய்தபடியே இருக்கும்.

" கடவுளே! நான் வாழும் இந்த உலகத்தை மக்கள் வாழக்கூடிய ஒரு இடமாக நான் வாழும்போதே மாற்ற வேண்டும்."

தனக்காக மட்டுமல்ல. கதிர்வீச்சின் பாதிப்புக்கு உள்ளாகிய ஆயிரக் கணக்கான தன் போன்ற- வர்களுக்காகவும் இந்த வேண்டுதலை அந்தச் சிறுமி இறைவனிடம் சமர்ப்பித்தாள்.


" ஆயிரம் கொக்குகளைச் சடோகா செய்து முடிச்சாளா? வருத்தம் சுகமாயிட்டுதா அப்பா.?"

" இல்லை ராசா.!"

அப்பாவின் குரலில் தெரிந்த சோகம் ரேகாவை என்னமோ செய்தது. தொடர்ந்து என்ன சொல்லப் போகிறார் என்று அவரையே பார்த்தபடி எதுவும் பேசாமல் இருந்தாள்.

'சமாதானம்' என்ற பிஞ்சு இதயமொன்றின் வேண்டுதலைச் சுமந்தபடி, 647 கடதாசிக் கொக்குகள் அருகில் காத்து நிற்க... சடோகா நிரந்தரமாய் உறங்கிப் போனாள்! விம்மி அழத்தொடங்கிய ரேகாவை அணைத்துக் கொண்ட அப்பாவின் கண்களிலும் கண்ணீர்.

ஹிரோஷிமா ஞாபகார்த்தப் பூங்காவில், கைகளில் ஒரு கொக்கை ஏந்தியபடி, சிலை வடிவில் நிற்கிறாள் சடோகா சசாகி.





" இதுவே எங்கள் அழுகை."

" இதுவே எங்கள் பிரார்த்தனை"

" உலகில் சமாதானம் நிலவ வேண்டும்."

சிலையின் கீழ் மேற்கண்ட வாசகங்கள் பொறிக்கப்பட்டிருக்கின்றன.

## ஆகஸ்ட் 06 –
## ஜப்பானின் வருடாந்த சமாதான நாள் சடோகா சசாகிக்கு அர்ப்பணிக்கப் பட்டுள்ளது

உலக சமாதான கொக்குத் திட்டம்

**( Peace Crane Project )**

உலகச் சிறுவர்களை ஒன்றிணைத்து ஒரிகாமி மூலம் செயல்படுத்துவது 2013 இலிருந்து சித்திரக் கலைஞர் சூ யு ஜூ சி கோ வினால் மேற்கொள்ளப்படுகிறது.

சடோகா கண் மூடிய ஒக்டோபர் 25 இல் ஜப்பானின் பாடசாலைகள் ஒவ்வொன்றிலும் 1000 ஒரிகாமி கொக்குகள் சிறுவர்களால் செய்யப்பட்டு, பார்வைக்கு வைக்கப் படுகிறது.

சமாதானத்துக்கான வேண்டுதலைக் குழந்தைகள் இறைவனிடம் சமர்ப்பித்த வண்ணமே இருக்கிறார்கள்.





# மலேசியாவில் நடைபெற்ற தனித் தமிழியக்க மாநாட்டில் வெளியிடப்பட்ட நுட்பவியல் கலைச் சொற்கள் :

| | | |
|---|---|---|
| WhatsApp | - | புலனம் |
| Youtube | - | வலையொளி |
| Instagram | - | படவரி |
| WeChat | - | அளாவி |
| Messenger | - | பற்றியம் |
| Twitter | - | கீச்சகம் |
| Telegram | - | தொலைவரி |
| Skype | - | காயலை |
| Bluetooth | - | ஊடலை |
| WiFi | - | அருகலை |
| Hotspot | - | பகிரலை |
| Broadband | - | ஆலலை |
| Online | - | இயங்கலை |
| Offline | - | முடக்கலை |
| Thumb drive | - | விரலி |
| Hard disk | - | வன்தட்டு |
| GPS | - | தடங்காட்டி |
| CCTV | - | மறைகாணி |
| OCR | - | எழுத்துணரி |
| LED | - | ஒளிர்விமுனை |

| | | |
|---|---|---|
| 3D | - | முத்திரட்சி |
| 2D | - | இருதிரட்சி |
| Projector | - | ஒளிவீச்சி |
| Printer | - | அச்சுப்பொறி |
| Scanner | - | வருடி |
| Smart phone | - | திறன்பேசி |
| Sim card | - | செறிவட்டை |
| Charger | - | மின்னூக்கி |
| Digital | - | எண்மின் |
| Cyber | - | மின்வெளி |
| Router | - | திசைவி |
| Selfie | - | தம் படம் ~ சுயஉரு ~ சுயப்பு |
| Thumbnail | - | சிறுபடம் |
| Meme | - | போன்மி |
| Print Screen | - | திரைப் பிடிப்பு |
| Inkjet | - | மைவீச்சு |
| Laser | - | சீரொளி |

# அக்கறை உறவுகள்




எழுநிலம் இணைய பத்திரிகை மணம் 06 வாசித்தேன்
01. பத்திரிகை அமைப்பு, தரம் அருமை.
02. பார்த்தீபன் இன்னும் பசியோடிருக்கிறான் அட்டைப்படம் மனதில் கனதியை தந்தது.
03. நலன் சார் அரசியல் ஆசிரியர் கருத்து எளிய நடையில், மிகத் தெளிவாக உள்ளது. பாராட்டுக்கள்.
04. திலீபனைப்பற்றிய கருத்துக்கள், கவிதைகள் அவரின் மனதினை தெளிவுபடுத்தி, அக் காலத்துக்கே கொண்டு சென்றன. எழுதியவர்களுக்கு பாராட்டுக்கள்.
05. போரும் வாழ்வியலும் தொடர் கட்டுரை போராட்டத்தின் நியாயமான பக்கத்தினை தொட்டுச் செல்கிறது.
06, வரலாற்றில் ஒருநாள் தேசியத் தலைவரின் சிந்தனையில் உருவான கதை கூறி நின்றது.
ஆப்கானிஸ்தான் பெண்கள் நிலை கவலை தருகிறது.
07. வன்னி விழிப்புலனற்றோர் சங்கம் அறிமுகம் எமக்கான கடமையை நினைவூட்டுகிறது.
08. மனித உரிமை தொடர் கட்டுரையின் முடிவுப் பகுதி பார்த்தமையால் தொடக்கத்திற்கான தேடல் தொடங்கப் பெற்று வாசிக்கப்பட்டது. தரமான கட்டுரை தந்த ந.மாலதிக்கு நன்றி கலந்த பாராட்டுக்கள்.
09. தோற்றுப் போகும் மறு பதிப்பு வெற்றி முழக்கம்.
10. அட அட தமிழில் இவ்வளவு உண்டா! வியந்து நோக்கினேன். நாம் கற்றது கைப்பிடி மண்அளவே.
11. நெருப்பில் பூத்த மலர்கள் சமுதாயத்தில் புரையோடியிருக்கும் புண்களை காட்டி நிற்கிறது.
12. தேசிய தலைவர் பற்றி நவசமாஜ கட்சி செயலாளர் திரு விக்கிரமபாகு கருணாரத்ன கூறிய கருத்து உண்மையைச் சொல்லியிருக்கிறது.
13. இறுதியாக தமிழீழ தேசிய பறவை பற்றிய பதிவும், காந்தளின் கவிதையும் அபாரம்.
இதைவிட எனது கருத்தாக,
01 . தமிழீழ ஊர் அறிமுகம்.
02.தமிழீழத்தில் வாழும் இளைய சமுதாயம் எதிர் நோக்கும் பிரச்சனைகள்.
03. விழிப்புணர்வு பதிவுகள் போன்றன வந்தால் இன்னும் பத்திரிகை மெருகு பெறும்.

- சந்திரன் - ஜேர்மனி

வணக்கம்.
தங்கள் எழுநிலம் பத்திரிகை மணம் 06 பார்த்தேன். முக்கனிகளை தேனில் குழைத்து போலவும், அழகிய மலர்களால் தொடுக்கப்பட்ட கதம்ப மாலைபோலவும், கருத்தாழமிக்கதாக இருந்தது. தொடக்க அட்டைப் படத்திலிருந்து முடிவுவரை மிக திறமையாக நேர்த்தியாக வடிவமைப்பு செய்யப்பட்டுள்ளது. இதில் கட்டுரைகள், கவிதைகள், சிறுகதை, வரலாற்றில் ஒரு நாள் என்பன மிகச் சிறப்பு. தங்கள் பத்திரிகை மேன்மேலும் சிறப்புற வாழ்த்துக்கள்

திருமதி மல்லிகா விசுவநாதன்
சுவிண்டன்

எழுநிலம்.

வழமை போல நான் முதலில் படிக்கும் வரலாற்றில் ஒரு நாள்படித்து மகிழ்ந்தேன். இது எங்கள் பிள்ளை திலீபனுக்கு உரிய மாதம்.
எல்லா பதிவும் பார்த்தேன். பார்த்திபன் என்ற பெயர் இப்போதெல்லாம் பார்த்தீபன் என்றே எழுதப்படுகிறது. ஏன் அப்படி? கலாசாரம் என்ற சொல் கலாச்சாரம் என்று சொல்லப்படுகிறது. கலை, சாரம், கலாசாரம்.
அந்த "ச" ஏன் இடையில்? பேசும்போது அப்படி உச்சரிக்கப்படுகிறது.
எனினும் எழுதும்போது அது சரி அல்ல என்பது தான் தமிழின் விதி முறை.
சிறு கதை படித்தேன்.
இன்றைய கால கட்டத்தில் இது மிகவும் தேவையான ஒரு கருப் பொருள்!
பாராட்டுகள்!
மொத்தத்தில்..
'சிறப்பு'

அத்தி
இலண்டன்.

